தென்மொழி

தமிழர் முதலில் தம் இனம் காக்கவே!

எதனைக் காவா விடினும் தமிழர்
எந்தமிழ் மொழியையும் மரபையும் காக்க!
அதுதான் தமிழினம் அழியாது காக்கும்!
அதுதான் தமிழகம் இழியாது தேக்கும்!
புதிதாய்ப் பிறந்தவர் அனைவரும் உலகில்
புல்லிய தம்மொழி, இனநலம் காக்கையில்
எதுதான் தோன்றிய காலம்என் றறியா
எந்தமிழ் இனநலம் காப்பது தவறோ?

அவரவர் மொழிதான் அவரவர் இனத்தை
அழியாமற் காக்கும் ஆணிவேர் ஆகும்!
அவரவர் மொழியை அவரவர் இனத்தை
அழியாமற் காக்கத் தமிழை அழிப்பதோ?
எவரெவர் மொழியும் இனமும் வாழ
எருவாய் உழைத்தே தமிழினம் வீழ்வதோ?
தவறாது தமிழர் தம்மொழி பேணுக!
தாழாமல் முதலில் தம்இனம் காக்கவே!

சுவடி: 14
ஓலை: 3
விலை: உரு.1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

நமக்கு வந்த மடல்கள்.

0:528: தனித்தமிழ்ச் செல்வரே! வணக்கம். இந்நாட்டு அறத்தை வலுப்படுத்துதற்காக தம் வாழ்நாள் முழுதும் பாடுபட்ட அந்தண அறவோர், உயர்திரு. க. நடேசனர் அவர்களின் நினைவாசுக் கட்டுரை வெளியிடும் 'தென்மொழி'க்கு என் வாழ்த்துக்கள்!

மேலும் திருக்குறளுக்குத் தாங்கள் மெய்ப்பொருளுரை கண்டுள்ளீர்கள் என்பதறிந்து களிப்புறுகின்றேன். இங்கு என் பணிவான வேண்டுகோள் ஒன்றுளது. யாதெனில், ஐயா, நடேசனுர் அவர்களின் 'திருக்குறள் பாயிர விளக்க ஆய்வுகள்' இதுகாறும் வெளிவராத பகுதிகள் பல அவர்தம் இல்லத்தில் இன்றும் உறங்கிக் கிடக்கின்றன. அவை தங்களால் விழிப்படைய வேண்டும். (அப்படி விழிப்படையுமாளுல்; பழந்தமிழ்க் குமரி நாட்டு மெய்ப்பொருளியல் வரலாறு துலங்குவதோடு, அஃது உலக மெய்ப்பொருளியல் வரலாறுகளுக்கெல்லாம் மூலமாக இருப்பதும் துலங்கும்.) பின் அதனைக் கால்கோளாகக் கொண்டு தங்களின் மெய்ப் பொருளுரை அமையப் பெறுமாளுல், அது தமிழ் மொழி-இனம் உள்ளளவும் நின்று நீடு புகழ் சேர்த்துத் திருக்குறளுக்கு இன்று வரை வழங்கி வருகின்ற பொருந்தா உரைகள் பொடிபட வீழ்ந்து சிறப்புறும் என உறுதி கூறுகின்றேன். —ஈ. உலகவரசன், சேலம்-1.

0:529: பேரன்புடையீர், வணக்கம். (சுவடி: 14, ஓலை 1) ஏப்ரல் இதழ் ஆசிரிய உரையை இன்றுதான் படித்தேன். இரண்டு முறை கருத்தூன்றிப்படித்தேன். நீங்கள் உய்த்துணர்ந்துள்ள பெரும்பாலான கருத்துகள் எனக்கும் உடன்பாடே. அனல். தி. மு. கழகத்தைத்தவிர தமிழினத்திற்குக் காவலாக நிற்கின்ற இயக்கம் வேறு ஒன்றும் இல்லை என்று நீங்கள் வற்புறுத்தி இருப்பது எனக்குப் பிடிபடவில்லை. அண்ணு தி. மு. க. தலைமையை நினைத்துக்கொண்டு அந்தக் கழகம் காவலாக இருக்க வாய்ப்பு இருக்காது என்று எண்ணுகிறீர்களா? இன்றைக்குப் பிரிந்து கிடப்பவர்கள் எல்லாம் ஒருகாலத்தில் ஓர் இயக்கத்தைச் சார்ந்தவர்களே; அப்படி இருக்க, ஒரு பிரிவை மட்டும் நீங்கள் வற்புறுத்துவதின் நோக்கம் விளங்கவில்லை.

தமிழின் தனித்தன்மை, இனத்தின் தனித்தன்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்து இருக்கமுடியாது. என்றுலும். தி. மு. க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் மேற்கொண்ட பல பணிகள் விளம்பரக் கருவிகளாகப் பயன்படுத்த மேற்கொண்டனவே தவிர வேறு எந்தவகையான அடிப்படையும் அங்கே இல்லை என்பதே என் கருத்து. இன்னென்றையும் இங்கே நான் வற்புறுக்க விரும்புகின்றேன். தமிழின் தனித்தன்மை, இனத்தின் தனித்தன்மை அரசியல்காரர்களால் மட்டுமே காப்பாற்றப்படும் என்று கருதுவது சரியான கருத்தன்று. அரசியல்காரர்களிடம் தமிழுணர்ச்சி இருக்கலாம். ஆனல் தமிழுணர்ச்சி உள்ளவர்களிடம் அரசியல் உணர்ச்சி இருக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. அரசு சாராத ஒரு தனி அமைப்பு அல்லது இயக்கம் தோன்றி, வளரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக நான் நம்புகிறேன். நோக்கங்கள் எவ்வளவு நேர்மையாக இருந்தாலும், அவற்றைப் பரப்புகின்றவர்கள் நேர்மையற்றவர்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க.)

உறவினால் அழிவதை
உயர்வெனக் கருதுவேன்!

தமிழரே என்றனைத் தாழ்த்தினும் வீழ்த்தினும்
தமிழருக் குழைப்பதே என்பெரு வேலையாம்!
உமிழாத கொள்கையேன்; பகைவரால் அன்றி, என்
உறவினால் அழிவதை உயர்வெனக் கருதுவேன்!
அமிழாத நந்தமிழ் அன்றையப் பெருநிலை
அடைந்திடப் போரிடும் அயர்விலாப் பணிக்கிடைச்
சிமிழா,என் விழிகளும் தோள்களும் கால்களும்
செயலிழந் தயர்ந்தன என்பதென் சிறப்புமாம்!

சொல்லெடுத் திழிக்கினும் சோர்விலாச் செவியொடும்
சுழலிடைத் தள்ளினும் மயல்படா விழியொடும்
கல்லெடுத் தெற்றினும் வீழ்வுறு மெய்யொடும்
காலெடுத் துதைப்பினும் கலக்கமில் நெஞ்சொடும்
வல்லெடுத் துணர்வொடும் வண்டமிழ் வாழ்ந்திட
வல்லமைக் களிறென நடையிடும் போதிலே
புல்லெடுத் தெறிந்துயர் போக்கைத் தடுப்பவர்
புன்செயல் என்செயும் என்றனைப் புறத்திலே!

நோய்மிக முற்றியே நொடிந்திடும் ஒருவரை
நுண்ணுணர் வால், பரிந் துள்ளுயிர் ஒளிபெறத்
தாயெனப் பேணிடப் புகுந்தநல் மருத்துவர்
தந்நலம், தந்துயர் கருதிடில் தக்கரோ?
தாய்மொழி தம்மினம் தம்நிலம் யாவையும்
தாழ்த்தியும் வீழ்த்தியும் தம்மையும் இழக்குமிந்
நோய்மிகு தமிழரை நொடிதொறும் எண்ணிடும்
நோயினும் பிறிதொரு நோய்எனை வருத்துமோ?

தம்மையே நலப்படுத் தும்ஒரு நோக்கிலே
தமிழையும் நலப்படுத் திடுவதாய்ச் சொல்பவர்
எம்மையிங் கிழிப்பதும் அடிக்குழி பறிப்பதும்
இரங்கிடத் தக்கது! மிகஇழி வானது!
செம்மைசேர் உள்ளமும் செயலுர ஊக்கமும்
சிதர்வுறு மெய்யறி வூற்றமும் மிக்க, என்
வெம்மைதோய் உணர்வினை என்செய முடிந்திடும்?
வீணருக் கிரங்கிடு வீர்,கவல் நண்பரீர்!

தாய்மொழி, இன,நிலம் காத்திடும் கொள்கையில்
தடுக்கியும் வீழ்ந்திடற் கில்லை,காண் தமிழர்கள்!
வாய்மையும் தூய்மையும் வளைவுறு நேர்மையும்
வன்மையும் தொய்விலா முயற்சியும் தோய்தலால்,
நோய்மையும் பொய்மையும் வஞ்சகச் செயல்களும்
நூறுநூ றுயிரம் வாய்ப்பறை முழக்கமும்
பேய்மையும் காழ்ப்புறும் உட்பகைக் கீழ்மையும்
பித்தரின் தூற்றலும் சித்தரைக் குலைக்குமோ?

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!

சுவடி : 14 ஓலை : 3

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

இலக்கிய இதழ்

விடை-ஆடவை-தி. பி. உ00அ-சூலை-1977

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

திரவிட மரபு காக்கப் பெற்றது.

அரசியல் நிலைகளில் மக்கள் போதிய அறிவும் தெளிவும் பெற்றாலொழிய தேர்தல் முடிவுகள் எவருடைய கணிப்புக்கும் எதிர் பார்ப்புக்கும் பெரும்பாலும் ஒத்துவரா. ஆனால், மூன்றும்படி பொதுநிலை மக்கள் என்ன விரும்புகின்றனர் என்பதை ஒருவாறு கணிக்கத் தெரிந்தவர்கள், தேர்தல் முடிவை முன்கூட்டியே ஓரளவு அறிந்திருந்தனர். ஏனெனில் பெரும்பான்மை என்பது, நம் நாட்டைப் பொறுத்தவரை ஒரு குருட்டுத்தனமான போக்கை உடையது. ஆனால், பெரும்பான்மை மக்களால் விரும்பப்பெறுவதுதான் முடியாட்சியின் அடிப்படை இலக்கணம் என்று வரையறுத்து விட்டபின், அவ்வகையில் அமைந்த ஓர் ஆட்சியை எவ்வகையானும் தகுதியின்மை காட்டிப் பேசுவது நடுநிலையாக இருக்கமுடியாது. வேண்டுமானால் பெரும்பான்மையை நாம் வரையறுக்க எடுத்துக் கொண்ட முறைகளில் தவறுகள் இருக்கலாம்; அத்தவறுகள் திருத்தப்பெறாத வரை, தேர்ந்தெடுக்கப்பெற்றவர்களை வைத்து, அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களைக் குறைகூற முடியாது. நாம் விரும்புபவர்களைத் தேர்ந்தெடுத்தால் மக்கள் அறிவுடையவர்-

கள் என்பதோ, விரும்பாதவர்களைத் தேர்ந்தெடுத்தால் அவர்கள் அறிவற்றவர்கள் என்பதோ, தன்னலம் மிகுந்த அரசியல் புரட்டாகும். தேர்தல் நடப்பில் எவ்வகைச் சூழ்ச்சியோ, ஏமாற்றோ இல்லாதவரை, தேர்தல் முடிவு எத்தகையதாக இருப்பினும், குடியரசமைப்பில் நம்பிக்கை உடையவர்கள் அனைவரும் அதனை ஒருமனதாக ஒப்புக்கொள்ளவே வேண்டும். மக்களின் முடிவு இறைவனின் முடிவு என்பதும் இதனால்தான்! எனவே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆட்சிக்கு வந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நம் வரவேற்புக் குரியவர்களே!

இனி, வரவேற்புக் குரியவர்கள் பாராட்டுக்குரியவர்களாக இருக்கின்றார்களா என்பது, அவர்கள் நடந்துகொள்ளப்போகும் முறைகளிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டிய தொன்றாகும். புதியதாக வரும் எதுவும் தொடக்கத்தில் கொஞ்சம் மனச்சலிப்புடன்தான் ஏற்றுக்கொள்ளப் பெறும். ஏனெனில் பழைய நிலை மேலிருந்த ஒருவகைத் தெளிவும் அதன்வழி ஏற்பட்ட நம்பிக்கையும் ஒரு புறம்; புதிய நிலை பற்றிய அறியாமையும் அதன் வழி ஏற்படும் அச்சமும் அருவருப்பும் ஒருபுறம்! எனவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களை நாம் பாராட்டுவது என்பது, அவர்கள் எந்தெந்தத் திசையில் அடியெடுத்து வைக்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்தது. ஆனால், அவர்களை நாம் வரவேற்று வாழ்த்துரைப்பது என்பதோ, நம் தமிழ் நாட்டைப்பொறுத்தவரை, குறிப்பாக நம் தமிழினத்தைப் பொறுத்தவரை, இன்னும் குறிப்பாக, நம் திராவிட இனத்தைப் பொறுத்த வரை நாம் மிகவும் மகிழவேண்டிய ஒருசெய்தியேயாகும்.

தென்புலத்தைப் பொறுத்தவரை, வடபுலத்து மக்களால் [அல்லது தலைவர்களால்தாம் ஆகட்டும்!] என்றும் சரிநிகர் சமமாக நன்மை அல்லது நயன்மை கிடைத்து விடும் என்பது வெறும் பகற் கனவுதான்! அரசியல் வழியாகக்கட்டாயம் நன்மைகிடைக்கும்என்று அங்கிருந்து வரும் தேசியத் தலைவர்களும் அவர்களுக்குக் கட்டியங்காரர்களாக இருந்து, தெற்கு வாயிலைத் திறந்து விட்டுக் கொண்டிருக்கும் கட்சிக் கண்காணிகளும் தொடர்ந்து கூறி வருவது ஒருவகையில் உண்மையாகவே இருக்கலாம்! ஆனால், ஒரு நாடு, அல்லது ஒரு தேசிய இனம் என்பது வெறும் அரசியல் ஊதியத்தை மட்டும் கணக்குப் போட்டுப் பார்க்கும் நிலையிலேயே இருக்குமானால், அதன் அடிப்படை உரிமைகளை, இன்னும்-தெளிவாகச் சொன்னால் வரலாற்று வழியாக அது பெற்ற அல்லது பெற வேண்டிய ஊதியங்களைப் படிப்படியாக, இழக்க வேண்டியதாகவே இருக்கும். எனவே, அரசியல்வழி வரும் ஊதியத்தை விட வரலாற்று வழியாக நாம் பெறும் இழப்பு எத்தனை மடங்கு என்று கணக்குப்போட்டுப் பார்ப்பதே தேசிய இனங்களின் இயற்கை மேம்பாட்டுக்குரிய சரியான வழியாகும், இப்படி நாம் போட்டுப் பார்க்கின்ற கணக்கியல்படி, நமக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தாலும் சரிதான்; 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தாலும் சரிதான்; இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் அண்மையில் புதிதாய் முளைத்ததும், முளையிலேயே கருகிக் கொண்டிருப்பதுமான 'மக்கள் திராவிட முன்னேற்றக்

கழகம்' இனிமேல் முளைத்துக் கிளைத்து ஆட்சியைக் கைப்பற்றுமானு லும் சரிதான்! எவ்வாறேனும், எவ்வகையிலேனும், எவராலேனும் இங்குள்ள திராவிட மரபு கட்டிக் காக்கப் பெறவேண்டும் என்பதே நம் முழுமையான அரசியல் கொள்கை! ஏனெனில் கட்சி வரம்புகளை மீறியது இன வரம்பு! எனவே, நமக்கு இன நலந்தான் அரசியல் நலம்; பொருளியல் நலம்; குமுகாயவியல்நலம்! தொன்மைச் சிறப்புடைய ஓர் இனம், பிறிதோர் இனத்தால் குற்றுயிரும் குலையுயி ருமாகச் சிதைக்கப்பட்டுச் சீரழிகின்ற வரலாற்றுச் சிறுமையையும் அதன் பேரிழப்பையும் விட, அவ்வழியினின்று தோன்றும் அரசியல் பெருமையும் அதன் பேரூதியமும் உயர்ந்தனவோ, ஊக்கந்தருவ னவோ அல்ல. எனவேதான் வடபுலத்துக்கட்சிக்குத் தலையைப் பிடிப் பதினும், இங்குள்ள ஒரு தென்புலத்துக்கட்சிக்கு வாலைப்பிடிப்பது நமக்கு நலந் தருவதாக இருக்குமென்று நம்புகின்றோம். தி. மு. க. வந்திருந்தால் நல்லதுதான்; ஆனால் அ. இ. அ. தி. மு. க. வந்ததால் கேடில்லை என்றும், அதுவும் ஒருவகையில் நலஞ்செய்வதே என்றும் கணிக்கின்றோம்.

ஆனால், இங்குள்ள தமிழ் மக்களோ, தங்கள் இன நலத்தைக் காத்துக்கொள்வதைவிட, தந்தம் கட்சி நலத்தைக் காப்பதிலேயே கண்ணும் கருத்துமுள்ளவர்களாக இருப்பது, அவர்களுக்கு வரலாற்ற றிவு போதாது என்பதையே காட்டுகின்றது. அதற்காக நாம் மிகவும் இரக்கப்படுகின்றோம்! எனினும் எப்படியோ, அவர்களையறியாமல் அவர்களின் குருதி நாளங்களில் ஓடிக்கொண்டிருக்கும் 'திராவிட இன மரபு இத்தேர்தலில் கட்டிக் காக்கப் பெற்றிருக்கின்றது. அதைப் பொறுத்த அளவில் நாம் அவர்களுக்காக நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். எனவேதான் ஆட்சிக்கு வந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரை 'வருக வருக' என வரவேற்பதில் நாம் பெரிதும் அக்கறையுடையவர்களாக இருக்கின் றோம்.

இனி, ஆட்சிக்கு வந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தினர், தமக்கு மக்களால் கொடுக்கப்பெற்ற பெரும் பொறுப்பினை, இயற்கையாகத் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு நல் வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, இங்குள்ள மக்களுக்கும் அவர்களின் வரலாற்றுச் சிறப்புடைய இனத்திற்கும், மொழிக்கும் தம் ஆட்சிக்காலத்தில், எவ்வெவ் வகையில் நல்லது செய்ய முடியுமோ, அவ்வவ் வகையில் தவறாமல் செய்து விடவேண்டும் என்பதில் ஆர்வ மும் அக்கறையுமுடையவர்களாக இருத்தல் வேண்டும். ஏதோ, தம் அரசியல் ஊதியத்திற்காகத் தம் பதவிகளைப் பயன்படுத்திக்கொள்ளா மல், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தம் அறியாமையாலோ, அக்கறையின்மையாலோ, நம் மொழிக்கும், இனத்திற்கும் செய்யத் தவறிய நன்மைகளைக் காலத்தாலும் இடத்தாலும் பொருளாலும் தேர்ந்து செய்து முடித்தல் வேண்டும். தாங்கள் செய்துவிட இருக் கும் தவறுகள் தங்கள் தனிப்பட்ட நலன்களுக்குச் செய்துகொண்டு விடும் கேடுகளாகி விடும் என்று எண்ணிவிடாமல், தங்கள் மொழி, இன மரபுகளைக் கட்டிக் காக்கத் தவறிய குற்றங்களாகி விடும் என்று

கருதிக்கொள்ளுதல் வேண்டும். மொத்தத்தில் இவ்வினத்தையும் மொழியையும், இவர்கள் காலத்தில் ஒருபடி முன்னேற்றி விடுவதில் அன்பும் அக்கறையும் கொண்டு உழைப்பதே தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் திரைப்படக் கலைஞர் திரு. மா. கோ. இராமச்சந்திரனுக்கு இருக்கும் கடமைகள் ஏராளம்! அவர் கடந்த காலத் திரைப்படங்களின் வந்த பாடல்கள் வழியாகவும், உரையாடல் வழியாகவும், வெளிப்படுத்திய மக்கள் நலக்கொள்கைகள் ஏராளம்! தொழிலாளியாகவும், முதலாளியாகவும், பொதுநலத் தொண்டராகவும் அவர் நடித்துக்காட்டிய நடிப்பையும், கூறிய உறுதி மொழிகளையும் நம்பியே மக்கள் அவர் கையில் தங்களை ஒப்படைத்துக் கொண்டனர் என்று அவர் உறுதியாக நம்புதல் வேண்டும். அவர்களுக்காக, அவர்கள் எதிர்பார்த்த நலன்களைத்துணிந்து செய்வதுடன், அவர்களால் எதிர்பார்க்கப் பெறாத—ஆனால் அவர்கள் இனத்திற்கும் அவர்கள் மொழிக்கும் என்றென்றும் நிலையாக இருந்து கட்டிக் காக்கும் நன்மைகளை, கடந்த காலங்களில் இப்பேரினத்தின் ஆற்றல் சான்ற பெருந்தலைவர்களாக வீற்றிருந்த பெரியாரும் அண்ணாவும் கூறிச் சென்ற கொள்கைகளையும் அவற்றின் ஆணிவேராக அமைந்த இன நலத்தையும் மொழிநலத்தையும் ஊக்கமுடன் பேணிக் கொள்ளுதல் வேண்டும்.

தமிழர்களின் தலையாய மொழி, இன நலன்களைச் சிதைப்பதற்காகவே வடநாட்டுத் தலைவர்களால் உருவாக்கப் பெற்ற இந்திக் கொள்கைகளை திரு. மா. கோ. இரா. வின் ஆட்சி சுக்கு நூறாக்க வேண்டும். இந்தி வல்லாண்மையை ஒரு சிறு அளவிலேனும் தமிழகத்தில் தலையெடுக்க விடாமல் தடுத்து நிறுத்துதல் வேண்டும். இந்தி நுழைவு தேசியம் என்னும் பெயரால் செய்யப்பெற்று வரும் கொடுமையான ஒரு செயலாகும். இக்கொடுமைச் செயலை வடநாட்டு அரசியல் தலைவர்கள் எவரும் தவறானது என்று என்றைக்கும், எந்நிலையிலும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆட்சி வகையில் தமிழர்களுக்கு அவர்களால் இழைக்கப்படும் அரசியல், பொருளியல், குமுகாயவியல், வரலாற்றியல் கேடுகள் பற்பலவாகும். அவற்றையெல்லாம் இங்கு வாழ்ந்திருந்த இனநலத்தலைவர்களும் இக்கால் உள்ள அறிஞர்களும் பல முறையில் பல வகையாக விளக்கி வந்திருக்கின்றார்கள்; வருகின்றார்கள். அவர்களின் அறிவுரைக்கும் நல்லுரைக்கும் தக்கபடி மதிப்பளித்துச் செவிசாய்த்துத் தம் காலத்திற்குள், தாம் செய்ய விருப்பன இவை இவை என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கொண்டு செயல்படுதல் வேண்டும். அடுத்த முறையும் தாம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்க வேண்டும் என்பதையே தம் தலையாய குறிக்கோளாகக் கொள்ளாமல், இனி, எவர் வந்தாலும் இது போல் செய்ய வியலாது என்னும் வகையில், மெய்ப்புகழும் பெருமையும் பெறவேண்டிய பெருநோக்கத்துடன், முதலமைச்சர் அவர்கள் இயங்குதல் வேண்டும்.

தமிழினப் பகைவர்களும் வடபுலக் கொண்டான் மார்களும் தேசியம் என்னும் பெயரால் கடந்த ஆண்டில் நடத்திய கொடுமையும் கூத்தாட்டமும பலவாகும். தமிழ் மொழிக்கும் தமிழினத்திற்கும் நம்

முந்தையத் தலைவர்களாலும் முன்னைய ஆட்சியாளர்களாலும் விழிப்பாகச் செய்யப்பெற்ற அனைத்து நலன்களையும் கிண்டிக்கிளறி, அவற்றின் ஆணிவேர் சல்லிவேர்களையெல்லாம் கண்டு களைந்து அறுத்துச் சிதைத்தெறிந்த செயல்கள் பலவாகும். அவர்களின் அடங்காச் சினத்தால் தலைக்குப்புறக் கவிழ்க்கப்பெற்ற தமிழர் நலன்களும் தமிழ் வளன்களும் ஏராளம்! அவற்றைப் படிப்படியாக இனி, வெளிப்படுத்திக் காட்டுவோம். அவற்றையெல்லாம் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப் பேற்றுள்ள திரு. மா. கோ. இரா. அவர்கள் கவனமாகப் படித்தறிந்து, கீழ்ப்படுத்தப் பெற்ற நலன்களுக்கு மீண்டும் நன்னீர் ஊற்றிக் காத்து வரல் வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றோம்.

இனி, எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப் பேற்றுள்ள கலைஞரும் முதலமைச்சர் மா. கோ. இரா.வின் மேல் தனிப்பட்ட முறையில், வெறுப்போ,பகையோ கொள்ளாமல்,'கன்றினுல் கொள்ப கறந்து' என்பது போல், அவர் வழியாக நம் நாட்டிற்கும் இனத்திற்கும் மொழிக்கும் முழுநலன் ஏற்படும் வகையில், செய்து கொள்ள வேண்டிய அனைத்துச் செயல்களுக்கும் தோன்றாத் துணையாக நின்றுதவ வேண்டிக் கொள்கின்றோம். கட்சி வேறுபாட்டையோ, கருத்துவேறுபாட்டையோ பெரிதாகக் கருதாமல், 'அவர் செய்த ஒன்றுநன்றுள்ளக் கெடும்' என்னும் குறள் மொழிக்கு ஒப்ப, தமிழ் நலன் கருதி அவர் செய்யும் ஒவ்வொரு செயலையும் மனமுவந்து பாராட்டிக் கொள்வதுடன், அவர் செய்யத் தவறும் ஒவ்வொரு சிறு வினையையும் அன்பொடும், அக்கறையொடும் சுட்டிக்காட்டி, இனி விளங்கவிருக்கும் தமிழின வரலாற்றுக்கே வழிகாட்டியாக அமைந்தொழுக வேண்டும் என்று பல்லாற்றானும் பரிந்து வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்! 'ஒல்லும் வாய் எலலாம் வினை நன்றே' என்னும் வள்ளுவர் வாய்மொழியைப் போற்றிக் கொள்ளும் திறலாண்மை யுடையவர் கலைஞர் என்பதை நாம் நன்கு அறிவோம். மேலும், 'இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற ஒளியோடு ஒழுகப் படும்' என்னும் பொய்யா மொழியும் கலைஞர்க்குப் புதியதன்று!

இனி, அரசியல் என்பது ஒருவகையில் பள்ளம் படுகுழிகள் நிறைந்த முட்காடு போன்றது. அதனுள் நுழைந்து அதனைத் திருத்தியமைத்து, மக்கள் வாழும் நன்னிலமாகச் செய்யப் புகும் முயற்சி எளிதன்று. அவ்வாறு புகுந்தபின் அதன் இழிவு இறக்கங்களில் சொற்சோர்வும், வினைச் சோர்வும் கொள்ளாமல், கால்களில் முள் தைக்கையில், முள்ளை முள்ளால் களையவும், மேட்டைச் சிதர்த்துப் பள்ளத்தில் இட்டு நிரப்பவும் தெரிந்து கொள்வது ஓர் அரிய மனவியற் கலையாகும். அக்கலையெல்லாம் கைவரப் பெற்ற ஓர் அருங் கலைஞராகிய நம் அருட்செல்வனார், மா. கோ. இரா. தாம் செய்யத் தவறிய செயல்களையெல்லாம் செய்து புகழ் பெற்று விடுவர் என்னும் உளத்துணுக்குக்கும் உணர்வுக் குமுறலுக்கும் இடம் வையாமல், தாம் செய்யாதனவற்றை இவரேனும் செய்கின்றாரே என்னும் பெருந்தகைமை கொண்டு போற்றிப் பெருமை செய்வது, அவர்மேல் இன்றைய முதலமைச்சர் கொண்டதாகக் கருதப் பெரும் பொறாமையுணர்வையும் பகையுணர்வையும் அடியோடு போக்க உதவும் ஒரு

பள்ளிப் பாட நூல்களில்
குறும்புத்தனமான மாற்றங்கள்!

[முன்னைய தமிழக அரசால் வெளியிடப்பெற்று இதுவரை தமிழ் நாட்டுப் பள்ளிகளில் பாடமாக வைக்கப்பெற்றிருந்த, முதல் வகுப்பு முதல் பதினொன்றும் வகுப்பு வரையுள்ள பாடப்பொத்தகங்களில் இப்பொழுது பலவகை மாற்றங்கள் செய்யப்பெற்றுள்ளன. தமிழ் மொழியறிவும் தமிழ் நாட்டு வரலாறும் பள்ளி மாணவர்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்னும் அடிப்படையில் அம்மாற்றங்கள் செய்யப்பெற்றுள்ளன. இதற்கு இங்குள்ள ஆரியப் பார்ப்பனர்கள் தாம் முழுக்கரணியமாக இருத்தல் வேண்டும். இம்மாற்றம் பற்றி அரசுக்கு விடுத்துள்ள கோவை சேரர் கொற்ற வேண்டுகோள் மடல் இது. இது பற்றி விரிவான செய்தி அடுத்த இதழில் வெளிவரும்.]

மடல்; சே. கொ./8/ஆ-08-77-இயல்/பதிவு
பக்கல்: தி. பி. 2008, ஆடவை 9 [23-6-77] வியாழன்

மதிப்பிற்குரியீர்,

பொருள்: பள்ளிப் பாட நூல்-தமிழின முன்னேற்றக் கட்டுரைகள் நீக்கம்-கொல்குறும்பைக் கண்டித்தல், மீண்டுஞ் சேர்ப்பிக்கக் கோருதல் குறித்து.

கீழ்வரும் எங்கள் கொற்றத்தின் தீர்மானத்தைத் தங்கள் பார்வைக்கு வைக்கின்றோம்;

"தமிழக உயர்நிலைப் பள்ளிப் பத்தாம் வகுப்புத் தமிழ்ப் பாட நூலின் உரைநடைப் பகுதியில் உள்ள; (1) அறிஞர் அண்ணா எழுதிய 'தமிழர் தலைவர் பெரியார்'; (2) நாவலர் பாரதியார் எழுதிய 'தாய்மொழியில் உயர்தரக் கல்வி' என்ற கட்டுரைகள் உட்பட எல்லாப் பாடங்களும், அவை வைக்கப்பெற்று உரிய மூவாண்டுக் காலங்கழியு முன்பே, இப்போதைய (1977-78) பாட நூலில் நீக்கப் பெற்றுள்ளதை வன்மையாகக் கண்டிப்பதுடன், சேரர் கொற்றமானது, அவ்விரண்டு கட்டுரைகளும் உடனடியாக இப்போதைய புதிய பாட நூலில் மீண்டும் சேர்க்கப் பெறுதவற்கு ஆவன செய்யவேண்டும் என உரியவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது."

அறிஞர் அண்ணாவின் வழி அரசு அமையும் காலம் இது. இக் காலத்திலேயே, அறிஞர் அண்ணாவாலேயே-அதுவும், தமிழி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நற்செயலாக அமையும் என்று கருதுகின்றோம். 'இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம்' என்னும் பெரும்புலவரின் அரும்பொருள் நூற் கருத்தைக் கலைஞர் போற்றிக் கொள்வாரென்று நம்புகின்றோம். எதிரும் புதிருமாக வீற்றிருந்து அரசாளப் புகுந்த இவ்விரு தலைவர்களின் மேலாளுமையில் நம் இனமும் மொழியும் நாடும் செழித்து வளர்வதாகுக! பிறபின்.

னக் குமுகாய மீட்புத் தந்தை பெரியாரின் தொண்டு வாழ்வின் பொதுமைச் சிறப்பியல் விளங்க எழுதப் பெற்ற வரலாற்றோவியம் பாடத்தினின்று எடுக்கப்படுவதா? நம் இளந்தமிழ் மாணவர் செல்வங்கட்கு அந்த மூல வரலாற்றறிவு மாற்றப்பட்டு விடுவதா?

அதேபோல், நம் தமிழக அரசும், அதனை மேலாளும் தில்லி 'மக்கள்' அரசும், தாய்மொழிவழிக் கல்வியை வலியுறுத்தி வருங்கால், தாய்மொழிக் கல்வியின் பெருமை தோன்ற மொழிமறவர் பாரதியார் தீட்டிய கருத்தோவியம் நீக்கப்படுவதா? நந்தமிழ் இளைஞு, இளைஞருக்கு மொழியுணர்வு சிறத்தல் தடுக்கப் பட்டு விடுவதா?

இவையெல்லாம், நம் தமிழ் மொழி—இன—நாட்டு மேம்பாட்டுப் புரட்சியை, வேரறுத்து அடியோடு வீழ்த்திவிடற்குச் சூழ்ச்சி செய்த வஞ்சினக் கொல்குறும்பேயல்லாமல் வேறென்ன?

எனவே- கடமை உடையீர்! உடனடியாக எண்ணித் துணிந்து, இந்த முறைகேட்டினைச் சரி செய்யும் வண்ணம் உடனுக்குடன் அவ்விரு கட்டுரைகளும் உயர் நிலைப் பள்ளிப் பத்தாம் வகுப்புத் தமிழ்ப் பாட நூலில் இடம் பெற ஆவன செய்யுமாறு வற்புறுத்துகின்றோம்; இத்தகு முறைகேடுகள் மேலும் நேரா வண்ணம், இதற்குக் காரணமாயினாரைக் கண்டித்தும் தண்டித்தும் காவல் அமைக்கவும் கோருகிறோம்.

மேற்குறித்த புலனங்கள் பற்றித் தாங்கள் எடுக்கும் உறுதியான நடவடிக்கைகளை, வரும் ஆடவை 25 (சூலை 9, 1977) பக்கலுக்குள் எங்களுக்குத் தெரிவிக்குமாறும் வேண்டுகிறோம். தக்க பயனை உரிய காலத்துக்குள் எதிர்நோக்கியுள்ளோம்.

இன்ன வண்ணம்,

கோவை-12) (முறையீட்டுக்குழுவிற்காக)
200அ ஆடவை ௧௩) தென்மொழி மறை. நித்தலின்பன்
27-6-77 திங்கள்) அமைச்சர்; சேரர் கொற்றம்
(தமிழின மேம்படுத்த இயக்கம்) கோவை-12

படி—(1) ஆளுநர்
(2) (பதவியேற்கும்) 'புரட்சி' முதல்வர்
(3) கலைஞர் மு. அருட்செல்வனார்
(4) வீரமணி, 'விடுதலை' ஆசிரியர்
(5) தலைமைச் செயலாளர், கோட்டை.
(6) இயக்குநர், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
(7) பள்ளிக் கல்வி இயக்குநர்
(8) முதன்மைக் கல்வி அலுவலர், கோவை.
(9) மாவட்ட ஆட்சியாளர், கோவை.
(10) நடுவணரசு அமைச்சர் பா. இராமச்சந்திரன்

மற்றும் பலர்.

தமிழ்நாட்டரசுச்
செந்தமிழ்ச் சொற் பிறப்பியல்
அகர முதலிப் பணி நிலை.

(பாவாணர் அறிக்கை)

அகர முதலியென்பது ஆண்டு மலரும் வாழ்க்கை வரலாறும் போன்றதன்று. ஒரு குடிசையை ஒரு நாளிற் கட்டி முடிக்கலாம். ஒரு கோபுரம் கட்டப் பல்லாண்டு செல்லும். சில பணிகளைக் கால வரம்பிட்டு அதற்குட் செய்துமுடிக்கலாம். சில பணிகளை அங்ஙனஞ் செய்ய இயலாது. அரும்பெரும் பணிகளெல்லாம் பணி வரம்பையே யன்றிக் காலவரம்பைக் கருதுதல் தவறாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்–ஆங்கில–தமிழ் அகரமுதலி (Lexicon), *1913*-ஆம் ஆண்டு ஐயாட்டைத் திட்டமாகத் தொடங்கி (பிற் சேர்ப்பு உட்பட) ௨௬ ஆண்டுக்காலம் தொடர்ந்து 1939-இல் ஏறத்தாழ ($4\frac{1}{2}$) இலக்க உருபாச் செலவில் முடிவுற்றது. தொடக்கந் தொட்டு அறுவர் பணியாற்றி வந்தனர்,

௧௨ மடலங்கொண்ட எருதந்துறை ஆங்கிலப் பேரகர முதலி (The Oxford English Dictionary) முற்றுப்பெற ௭௦ ஆண்டு ஆயிற்று. ஒருவர் பின் னொருவராகத் தொடர்ந்த நாற்பதிப்பாசி ரியர் தலைமுறைக் காலத்தில், நானூற்றுவர் நிலையான உதவியாள ராகப் பணியாற்றினர். மூவிலக்கத்து ஐயாயிரம் பவுண் செலவாகி யுள்ளது.

இன்று பூனாவில் அச்சாகி வரும் சமற்கிருத–ஆங்கிலப் பேரகர முதலிப்பணி *1948*–இல் தொடங்கிற்று. சென்ற ஆண்டு அதன் முதன் மடலம் வெளிவந்துள்ளது. அவ்வகரமுதலி வெளியீட்டிற்கு இந்திய அரசு ஒரு கோடி யொதுக்கியுள்ளது. அதன்மேலும், மராட்டிய அரசு, பூனாப் பல்கலைக் கழகம், இந்தியப் பல்கலைக் கழக நல்கைக் குழு (U. G. C.), ஒன்றிய நாட்டினங்கள் கல்வியறிவியல் பண்பாட்டமைப்பகம் (UNESCO), பாரிசிலுள்ள ஒரு சமற்கிருதக் கழகம் (CIPSH) ஆகியவை தனித்தனி பெருந்தொகை யுதவி வரு கின்றன. அவற்றுள், ஒ நா. (UN) உதவி இறுதிவரை ஆண்டு தொறும் தொடர்வது. மொத்தச்செலவு இரு கோடிக்கு மேலாகலாம்.

தலைமையரும் இடைமையரும் உதவியாளரும் துணையுதவி யாளருமாக, பதிப்பாசிரியன்மார் இருபத்திருவர் நிலையாகப் பணி

யாற்றி வருகின்றனர். 1990-இல் முடியுமென்று சொல்லப்படுகிறது. மேலுந் தொடரலாம்.

கேரள நாட்டில், அரசும் பல்கலைக் கழகமும் இணைந்து வெளியிட்டுவரும் எழுமடல மலையாள-மலையாள-ஆங்கில அகரமுதலிப் பணி 1953-இல் தொடங்கிற்று. பன்னிரண்டு சொற்றொகுப்பு வேலை முடித்துக்கொண்டு, முப்பத்தறுவரைக் கொண்ட பணிக்குழு, ஐயாண்டிற்கொரு மடலமாக வெளியிட்டு வருகின்றது. இதுவரை மும்மடலம் வெளிவந்துள்ளன. இன்னும் நான்கு வெளிவரல் வேண்டும், அதற்கு இன்னும் இருபதாண்டு செல்லும். ஆண்டு தொறும் பல்கலைக் கழக நல்கைக்குழு பணமுதவி வருகின்றது, ஐயாயிரம் படிகள் அச்சிடப்படுகின்றன. மொத்தச் செலவு ஒருகோடியிருக்கலாம்; மேற்படினும் படலாம்.

ஏனை மொழியகர முதலிகளெல்லாம், எத்துணை விரிவான வேனும், சொற்பொருளகர முதலிகளே. அவற்றுள் ஒரு சில, சொற்பிறப்பிய லகர முதலியென்று பெயர்பெற்றிருப்பினும், உண்மையிற் சொற்பிறப்பியல் அகரமுதலிகளல்ல; ஒப்பியல் (Comparative) அகர முதலிகளே. ஏனெனின், இயன்மொழியாகிய தமிழிற்போல் திரிமொழிகளாகிய ஏனையவற்றிற் சொற்களின் வேரையுல் முழு வரலாற்றையும் அறிய முடியாது.

ஆதலால், உண்மையான சொற்பிறப்பியல் அகர முதலி (Etymological Dictionary) தமிழில்தான் இருக்கமுடியும்.

இன்று தொகுக்கப்பட்டுவரும் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி, சொற்பொருள், சொற் பிறப்பியல் என்னும் ஈரியல்புகளையும் ஒருங்கே கொண்டது. இதன் பணி கீழ்வருமாறு என்கூற்றது.

க. இதுவரை வெளிவந்த தமிழகர முதலிகளிளெல்லாம் இல்லாத எல்லாச் சொற்களையும் இயன்றவரை எடுத்துப் பொருள் கூறுவது.

உ. ஏனையகர முதலிகளிலுள்ள தவறுன சொல் வடிவுகளைத் திருத்துவது.

(எ-டு): அரிவாள் மனைப்பூண்டு (வழு)-அரிவாள் முனைப் பூண்டு (திருத்தம்).

ங: ஏனையகர முதலிகளில் விடப்பட்டுள்ள பொருள்களையெல்லாம் இயன்றவரை எடுத்துக்கூறுவது.

ச. ஏனையகர முதலிகளிற் குறிக்கப்பட்டுள்ள தவறுன பொருள்களையெல்லாம் திருத்துவது.

(எ-டு): அளைமறிப்பாப்பு (ப்பொருள்கோள்) = பாட்டின் ஈற்றினின்ற சொல் இடையிலும் முதலிலுஞ் சென்று சென்று பொருள்கொள்ளப்படு முறை (வழு).

ஒரு பாட்டின் ஈற்றடி முதலடியாயும், ஈற்றயலடி இரண்டாமடியாயும், ஈற்றயன்முன்னடி மூன்றுமடியாயும், இங்ஙனமே ஏனையடிகளும், தலைகீழாக மாறி நின்று பொருள்படுவது. (திருத்தம்)

கூ. எல்லாப் பொருள்களையும் ஏரண முறைப்படி (Logical order) வரிசைப்படுத்திக் கூறுவது.

க. எல்லாச் சொற்கட்கும் இயன்றவரை திரவிட ஆரிய இனச் சொற்கள் (Cognates) காட்டுவது,

எ. எல்லாச் சொற்கட்கும் இயன்றவரை வேருடன் கூடிய வரலாறு வரைவது.

அ. ஏனையகர முதலிகளிற் குறிக்கப்பட்டுள்ள தவறான மூலம் திருத்துவது.

சொற்பொருளும் மூலத்திருத்தமும் தெளிவாக விளக்கப்படுமிடமெல்லாம், இவ்வகர முதலி அரைக் கலைக்களஞ்சிய முறையில் விரிவாக விருக்குமாதலாலும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகள் (Prniciples of Tamil Etymology), தமிழகரமுதலி வரலாறு (Hitory of Tamil Lexicogrophy) என்னும் இரண்டொடு கூடி கஉ மடலங்கள் வெளிவருமாதலாலும், எத்துணை விரைவாக வேலை நடப்பினும், முழுவகர முதலியும் முடிய, அல்லது வெளிவர இன்னும் பத்தாண்டு செல்லும்.

ஆயின், இதன் முதன் மடலம் முதற் பகுதி இவ்வாண்டிற்குள் வெளிவரும். அதுவே, தமிழ் உலக முதல் உயர்தனிச் செம்மொழியென்பதைப் பகைவரும் ஒப்புக்கொள்ளுமாறு, ஐயந்திரிபற நாட்டிவிடும்.

தொடக்க முதலீடாக ஈரிலக்கமே யொதுக்கப்பட்டுள்ள இவ்வகரமுதலித் திட்டத்தின்கீழ் இருவரையே துணைக்கொண்டு, என் சொந்தப் பொத்தகங்களையே, பெரும்பாலும் பயன்படுத்தி, இயன்றவரை ஒழுங்காகச் செய்துவரும் இப்பணி, இனி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, நெருக்கடி நிலையில் இழக்கப்பட்ட அனைத்துரிமையும் மீண்டுள்ள இம் மக்கள்(Janata)கட்சி ஆட்சியில், குறித்தகால வெல்லையில் முற்றுப்பெறும் என நம்புகின்றேன்.



தனிம வரிசை

இல். க. இரத்தினவேல், அறி. மு.
அறிஞர் அண்ணு அரசினர் கல்லூரி, செய்யாறு-604407.

5. ஈயம் (LEAD) Pb $^{207}_{82}$

எளிதாய் இளகும் மாழையின் பெயர் ஈயம். இதற்கான சொல் வரலாறு :

இய் — இள் — இளகு = இளகுதல்.
இய் — ஈயம்.

சற்றே வெப்பமுற்றவுடன் இளகிய இந்த மாழைதான், உருகு உலை முறையால் (Smelting) மாழைகளை உருக்கிப் பிரித்தெடுக்கும் வழி முறையைக் கற்கால மாந்தனுக்கு உணர்த்தியது. எனவே, கி. மு. 300 – க்கு முன்னரே மக்கள் ஈயத்தை அறிந்திருந்தனர் என்பது வெளிப்படை.

பழமை : பழங்காலத்தில் உரோமர்கள் பயன்படுத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க நீர்க்குழாய்கள் முற்றும் ஈயத்தால் ஆனவை. இன்றுவரை கெடாமல் இருக்கின்றன. உரோமர்கள் ஈயக்காசுகள், ஈய எழுத்துப் பலகைகள் ஆகியவற்றையும் கையாண்டனர். உணவைச் சமைக்கவும் ஈய ஏனங்களைப் பயன்படுத்தினர். இதனால் ஈய நஞ்சு ஏறித் தொல்லைக்குள்ளாகி வந்தனர்.

இரும்பு, செம்பு, அளமியம் (Aluminium), நாகம் (Zinc) இவற்றுக்கு அடுத்தபடி ஐந்தாவது மிக முகாமையான மாழையாய் விளங்குவது ஈயமே. ஈயத்தை மிகுதியாய் ஏற்றுமதி செய்யும் நாடு ஆசுத்திரேலியாதான்.

ஈயத்தைப் பெறுதல் : கலீனு (Galena) எனப்படும் ஈய சல்பைடு (Lead sulfide)-இல் இருந்தே ஈயம் பிரித்தெடுக்கப்படுகிறது. கலீனுவை வறுத்து ஈய உயிரகை(Pb o)யாக்கி அதிலிருந்து ஈயத் தனிமத்தைப் பெறலாம்.

ஈயத்தின் அடர்த்தி: கன'மீட்ட'ருக்கு 11340 'கிலோகிராம்' அஃதாவது நீரைப்போல் 11 மடங்கு கனம் மிக்கது. ஈயத்தின் இலத்தீன் சொல் வடிவம் ஆன Plumb (from Plumbum) என்பது ஆகு பெயராகிக் கனம் மிக்க குண்டுகளைக் குறிக்கும். நமது

ஞாலக்கோளைப் போல் 95 மடங்கு நிறைமிக்க காரிக்கோள் (Saturn) நிறைமிக்க ஈயத்துடன் தொடர்புறுத்தப்பட்டது. நிறைமிக்கதால் சூரியனைச் சுற்ற மிகுந்த காலம் எடுத்துக்கொள்ளும் காரிக்கோள் இந்தியப் பழங்கதைகளில் 'நொண்டி'யாக உருவகிக்கப்பட்டுள்ளது. தமயந்தியின் திருமணத்துக்குக் காரிக்கோள் (சனி) காலந்தாழ்த்தி வந்த கதையை ஓர்க !

பெயர் : வங்கம், சீருள் என்பன ஈயத்துக்கான வேறு இரு பெயர்கள்.

'வங்கமும் சீருளும் ஈயம் ஆகும்' (திவாகரம்). ஈயத்துக்கான இலத்தீன் சொல்லான (Plumbum) என்பதில இருந்தே Pb என்ற குறியீடு பெர்சீலியசால் தரப்பெற்றது.

பயன் : ஈயத்தின் எளிதில் இளகும் தன்மையே மிகுந்த பயனை விளைவிக்கிறது. தூய ஈயம் துருவேறிக் கரையக்கூடியதெனி னும் ஈயத்துடன் வாலரம் (Bismuth) சேர்ந்த கலவை வன்மை மிக்கது. இக் கலவையை அச்சில் வார்த்தால், உறையும்போது விரிவுற்று அச்சுகளும் வார்ப்புகளும் மிகத் துல்லியமாய் விளங்கும். எளிதில் தேயாது.

மின் சேமக்கல (Electric Accumalators) உருவாக்கத்தில் தான் ஈயம் பெரிதும் செலவழிக்கப்படுகிறது. பயனற்ற மின் சேமக் கலங்களில் உள்ள ஈயம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு பயனுறுத்தப் பெறுகிறது.

அணுக்கருச் சிதைவால் உண்டாகும் 'உயிர் கொல்லிக் கதிர் வீச்சுகளை உட்புகாமல் தடுக்கவல்லது ஈயம் ஒன்றுதான். ஈயம் இலேசுப் பட்டதல்ல. எனவே, ஈயத்தைக் கண்டு இளிக்கவேண்டாம்!

6. வெளியம் (TIN) Sn $^{119}_{50}$

பண்டைய உரோமர்கள் ஈயத்தை இலத்தீனில் Plumbum nigrum-அஃதாவது காரீயம் என்றும், Stagnum அல்லது Stannum என்னும் Tin-ஐ Plumbum candidum – அஃதாவது வெள்ளீயம் என்றும் வேறுபடுத்திக் கூறினர். அஃரிகோலா என்பவர் வாலரத்தை (Bismuth-ஐ) Plumbum cinereum – சாம்பல் நிற ஈயம் எனக் குறித்தார். தனித் தனித் தனிமங்களுக்குப் பெயர்

சூட்டுங்கால் இங்ஙனம் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்றபெயரை அமைக்கவாகாது. அது பெரும் குழப்பத்துக்கு வழிவகுக்கும்.

காரீயம், வெள்ளீயம் எனின், கரிய ஈயம், வெண்மை ஈயம் என்று ஈயத் தனிமத்தின் கலப்பு நிலையில் வேறுபட்டுள்ள மாழை (Metal)கள் என்று தவருகக் கருதப்பெறும். வெள்ளீயம் என்றவுடன் அஃது, ஈயத் தனிமத்தில் வெள்ளி சேர்ந்த கலப்பு மாழை என்றோ அன்றி மிகுந்த வெண்ணிற ஈயக்கூடிகை (Lead compound) என்றோ பொருள் மயக்கம் தரக்கூடும். இவ்வாறே காரீயமும் எனவே Tin அல்லது Stannum என்ற தனிமத்தைக் குறிக்க, வெள்ளீயம் என்ற சொல்லை நீக்கி 'வெள்' என்ற அதே முதனிலையைக் கொண்ட வெளியம் என்ற சொல் பரிந்துரைக்கப்பெறுகிறது. வெளியம் என்பதில் 'அம்' என்ற ஈறு (அல்லது இறுதிநிலை) மாழைகளைக் குறிக்கப் பயன்படுத்தும் பெருமைப் பொருட் பின்ஞெட்டு (Augmentative suffix) ஆகும்.

வரலாறு : வெளியமும் (Tin) செம்பும் கலந்த வெண்கலம் (Bronge) கி. மு. 3000-த்துக்கு முன்னது பயன்பட்டு வந்தது. ஊர் (Ur) என்ற இடத்து அகழ் வாய்வில் கிடைத்த வெண்கலத்தின் காலம் கி. மு. 3,500. இந்த வெண்கலத்தில் நூற்றுக்கு 10 முதல் 15 மேனி வெளியம் கலந்திருந்தது. இந்த ஊர் அகழ்வாய்வில்தான் தமிழ்நாட்டுக்கே உரிய தேக்கு முதலிய பொருட்கள் இருந்தமை தெரியவந்தது. பிருண்டீசியம் (Brundisium) என்ற இடத்தில் செம்பையும் வெளியத்தையும் கலந்து உருவாக்கிய வெண்கல ஆடியைப்பற்றியும், பற்றவைப்புக்குப் பயன்படும் வெளிய-ஈயக் கலவை பற்றியும் பிளினி (கி. மு. 79-இல்) குறிப்பிடுகிருர். இதிலிருந்தே வெளியம் பூசப்பெற்ற செம்பு ஏனங்களை உரோமர் பயன்படுத்தினர்.

கேசிட்ரைட் (Cassitrite - $Sn\ O_2$) என்ற கனியத்தில் இருந்துதான் உருகுலைகளின் உதவியால் வெளியம் தனிமப்படுத்தப்படுகிறது. இந்தக் கனியம் மிகுதியாய்க் கிடைத்த இடம், பிரிட்டானிக் கரைக்கு அப்பால் உள்ள கேசிட்ரைடு (Cassiterites) தீவுகள். நில ஓட்டில் உள்ள குழம்பு உறைந்த பாறைகளில் இலக்கத்தில் ஒன்று என்ற அளவில் வெளியம் கிடைக்கிறது. உலகுக்குக் கிடைக்கும் வெளியத்தின் அளவு மிகக் குறைவே. ஆண்டுக்கு இரண்டு இலக்கம் கல்லெடை(Ton)தான்.

பயன் : படை வீரர்களுக்கான உணவுப் பொருட்களை ஏனப் படுத்தி (Tinning) க் கெடாமல் பாதுகாப்பது பெரும் தொல்லையாய் இருந்தது. ஏனெனில், ஏனைய மாழை ஏனங்கள் நஞ்சூட்டுவனவாக வும், துரு ஏறுவனவாகவும் இருந்தன. வெளியத்தின் பயனை அறிந்த பின், ஏனத்துள் அளிக்கும் மிக மெல்லிய வெளியப்பூச்சு உணவுப் பொருட்களை முற்றிலும் தூய்மையாய் பாதுகாத்தது. இன்றோ ஏனப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் (Tinned foodstuff) அங் கிங்கெனாதபடி எங்ஙணும் உள்ளன.

வெளியத்துக்கு இன்னொரு பெயர் தகரம். மாழைத் தகடுகள் வெளியப் பூச்சு ஒன்றினாலே நிலைபெறுவதையறிந்து தகடு > தக ரம் என வெளியம் குறிக்கப்பட்டது.

செம்புக்கு 12% வெளியப் பூச்சு அளிப்பின், அது தூய 24 காரட் தங்கம்போல் சொலிக்கும்.

வெளியத்தின் கொதிநிலை 2270⁰ செல்சியசு. உருகுநிலை 232⁰செ. ஏறத்தாழ 2,000 பாகை நெடுக நீரம் (Liquid) ஆக இருக்கும் மாழை இஃது ஒன்றுதான். எனவே, எந்த மாழையுடனும் எளிதில் கலக்க ஏதுவாகிறது. மாழைகளைப் பற்றவைப்பதற்கு வெளியக் கலப்பு மாழைகள் பயன் பெறுகின்றன. உராய்வைத் தவிர்ப்பதற் கும், வன்மை மிக்க வளவு (Valve) களுக்கும், எந்திரங்களுக்கும், மின்னியற் கருவிகளுக்கும் (Electronic equipments) இன்னும் எண்ணிறந்த பணிகளுக்கும் வெளியக் கலப்பு மாழைகள் பயன் பெறுகின்றன.

பழங்கதைத் தொடர்பு : உரோமர்களின் தலைமைக் கடவு ளான சூபிடர் (Jupiter) உடனும், சூரியக் குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய கோளான, வியாழனுடனும் வெளியத்தைத் தொடர்பு படுத்தி யிருந்தனர்.

குறியீடு : தால்ட்டனின் குறியீடு (T) Stannum என்ற இலத்தீன் சொல்லில் இருந்து அமைத்த பெர்சீலியசு குறியீடு Sn.

" தமிழ்ச்சிட்டு "

சென்னை - 5.

	உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடு.
ஆண்டுக்கட்டணம் உருபா	4-00	9-00	9-00
தனியிதழ் ,,	0-35	0-75	0-75

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க !

வடநாட்டில் வாழ்ந்த தமிழ்!

பன்மொழிப்புலவர். இரா. மதிவாணன், க.மு., இலக். இ.

தமிழ்மொழி தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியப் பெருநிலம் முழுவதும் பேசப்பட்ட மொழியாகவிருந்தது. வடபுலத்தில் ஆரியரின் வருகைக்கு முன்பே மக்களின் பேச்சுமொழியாகவிருந்தது. ஆரியர் இந்தியாவில் குடியேறியபின், சமற்கிருதமும் வேதங்களும் தோன்றிய காலத்திலும் வடபுலத்தில் தமிழ் பிராகிருதமாகத் திரிந்து இலக்கிய வளமுடையதாக வளர்ந்துவந்தது. ஆரியர், மக்களோடு தொடர்பு கொள்ள பிராகிருதத்தைக் கற்க வேண்டியவரா யிருந்தனர். அதனாற்றான், வேதங்களில் பிராகிருதச் சொற்கள் கலந்துள்ளன. [1]

பிராகிருத மூலச்சொல் வடிவங்கள் பல திரிபுற்றன; மேலும் பல வழக்கிழந்தன. இன்றைய மலையாளத்தில் சற்றேறப்ப 70 விழுக்காடு வட சொற்கள் புகுந்துவிட்டதைப் போன்று, பிராகிருதத்திலும், சமற்கிருதச் சொற்கள் அளவிறந்து புகுந்ததால் சமற்கிருதச்சொல் எது, பிராகிருதச் சொல் எது என்று மொழிநூலறிஞரை நாடித் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. எனினும், இத்தனைக் கலப்புக்கும் இடையில் பிராகிருத மொழி தன் ஒலிப்பமைதியைத் தமிழிலக்கணக் கட்டுக் கோப்புக்கு ஏற்ப காத்து வந்திருப்பது மொழி நூலார்க்குப் பெரிதும் வியப்பளிக்கிறது.

நாவலந் தண்பொழில் எனப்பட்ட அக்காலத் தமிழகம் வடா அது பனிபடு நெடுவரை வடக்கும் தெனு அது உருகெழு குமரியின் தெற்கும் குணகுட கடல் எல்லைவரை பரந்திருந்தது. தெற்கும் 'குமரியொடு வட விமயத்தொரு மொழி வைத்து உலகாண்ட சேரன்' என்று சிலப்பதிகாரத்தில் கூறப்படும் உரைப்பாட்டு மடை புனைத்துரையன்று; குமரி முதல் காசுமீரம் வரை தமிழர் ஒருகாலத்தில் வாழ்ந்திருந்த உண்மை வரலாறாகும்.

தமிழும் சமற்கிருதமும்:

மொகஞ்சதாரோ அரப்பா நாகரிகங்கள் செழிந்திருந்த காலத்தில் வட இந்தியா முழுவதும் பேசப்பட்ட மொழி தமிழ் அல்லது மூலத் திராவிடம் என்று ஆய்வாளரால் கூறப்படுகிறது. கி.மு. 1000 வரை செழித்து வளர்ந்த இம்மொழி மிகவும் வளமுடையது. இம்மொழியின் எழுத்துகள் ஓவிய எழுத்துகளா யிருந்தன. இதே எழுத்து

---

[1] Many words occur in Vedas in Prakrit rather than Sanskrit.
—by John Beames.
|A comparative Grammar of Medern Aryan Languages of India - Introduction p. 6.

களை இன்றும் வட இந்தியாவில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் தம் பானைகளில் வரைகின்றனர் என்றும்; பானைகளின்மேல் வரையப் படும் இந்த எழுத்துக் கோவைகளின் பொருளை யறிந்தால் மொகஞ் சதாரோ முத்திரை எழுத்துகளை எளிதில் படிக்க இயலும் என்றும் திருவனந்தபுரம் திரவிட மொழியியல் பேராசிரியர் திரு. வி. ஐ. சுப் பிரமணியம் அவர்கள் கூறுகிறார். பழந்தமிழ் நூலான கூத்த நூலுள் வட தமிழ் எனுஞ் சொல்லாட்சி காணப்படுகிறது. கிரந்தம் எனும் சொல்லுக்கு வட தமிழ் என்று யாழ்ப்பாண அகரமுதலியில் பொருள் கூறப்பட்டுள்ளது.

ஆரியர் வருகையின் பின்பும், மங்கோலிய ஆத்திரிக்க மக்களின் ஊடாட்டத்தாலும் வட இந்திய திராவிட மொழி திரிபடைந்தது; திரிபடைந்தபின்பு பிராகிருதம் என்று அழைக்கப்பட்டது. பிராகிருதம் என்ற சொல்லுக்கு எழுதப்படாத மொழி என்று பொருள் கூறுவர். முன்பு செய்யப்பட்டது என்று பொருள் கூறுவார் உளராயினும் அது பொருந்துவதாகத் தெரியவில்லை.

பிராகிருத மொழி, அம்மொழி பேசும் மக்களால் 'பாவுவ' மொழி என அழைக்கப்பட்டுள்ளது. கல்வியறிவில்லாத மக்கள் தம் தாய் மொழியிலுள்ள பாடல்களைத் தலைமுறை தலைமுறையாகச் செவிச் செல்வமாகப் போற்றி வந்தனர். எனவே; தம் மொழியைப் பாவுவ மொழி அல்லது பாட்டு மொழி எனக் குறிப்பிட்டதில் வியப்பில்லை. தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்புகளில் பாட்டும் ஒன்றாகும். குமரிக் கண்ட காலத்திலிருந்தே தமிழரின் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்ச்சி யிலும் பாட்டு இன்றியமையாத இடம் பெற்றிருந்தது. தாலாட்டி விருந்து, ஆடல், விளையாட்டு, கதைமொழி, விடுகதை, ஏற்றம் இறைத்தல், பயிர் நடுதல், காவல் காத்தல், கிளி துரத்துதல், அறு வடைசெய்தல், நெல்லடித்தல், விழாக்கள், தெய்வ வழிபாடுகள், திரு மணம், குழந்தைக்குப் பெயரிடுதல், குரவையாடல், ஒப்பாரி வரை தமிழரின் வாழ்வில் அனைத்து நிகழ்ச்சிகளும் பாட்டாகவே இருந்தன. தமிழரின் வாயில் உரைநடையைவிட பாட்டே எளிதில் உரு வாயிற்று. பழந்தமிழரின் பேச்சுக்கூட பாட்டைப்போலவே இசை யாக நீண்டொலிக்கும் சொற்கோவையாக இருந்தது.

பிராகிருத மொழியில் பெரும்பாவலர் இருந்தனர். நாட்டுப்புறங் களில் பாடப்பட்ட பழம் பாடல்களும் தொகுக்கப்பட்டன. வடமொழி சிறப்புப்பெற்ற பிற்காலத்தில் பிராகிருதப் பாடல்களின் நயம் வட மொழியாளரின் உள்ளத்தைக் கவர்ந்தது. தெலுங்க சாதவாகன மன்னரில் ஒருவரான ஆலனின் காதா சப்தசதி (Gath Sapata

Sathi) என்னும் தொகுப்பு நூலை ஒட்டி வடமொழியிலும் ஆரிய சப்த சதி எழுதப்பட்டது.

பிராகிருதத்தில் நிறைய வடசொற்கள் கலந்திருந்தன. அரசியல் சார்புப் பெருக்கத்தால் மக்கள் பேச்சிலும் வடசொற்கள் அளவின்றிப் பெருகின. இக்கலப்பால் பிராகிருதம் பைசாசி பிராகிருதம் எனப்பட்டது. வட இந்தியாவில் சூரசேனி மாகதி பிராகிருதமும், நடுவணிந்தியாவில் மகாராட்டிர பிராகிருதமும் வழங்கி வந்தன. மாகதி பிராகிருதம் பிற்காலத்தில் பாலிமொழியாகப் பிரிந்து பௌத்தர்களின் சமய மொழியாயிற்று. பைசாசி, சூரசேனி, மகாராட்டிரப் பிராகிருத மொழிகள் சமண சமயத்தில் சமயமொழிகளாயின.

இந்தப் பிராகிருத, பாலிமொழிகளே இன்றைய வட இந்திய மொழிகளான இந்தி, குசராத்தி, மராத்தி, பஞ்சாபி, வங்காளி, ஒரியா ஆகியவற்றுக்கு மூல மொழிகளாகும். வட இந்திய மொழிகளுக்குப் பிராகிருதமே தாய்மொழி அல்லது மூலமொழி எனலாம். பிராகிருதத்திற்குத் தமிழே மூலமொழி என்பதைப் பலர் இன்னும் அறியவில்லை.

பிராகிருதத்தில் அல்லது இன்றைய வட இந்திய மொழிகளில் இருக்குவேத காலத்திய சமற்கிருதச் சொற்களைத் தனியாகப் பிரித்து விட்டால் எஞ்சியிருப்பது தமிழ் அல்லது மூலத் திராவிட மொழியே என்பதில் ஐயமில்லை. சமற்கிருதத்தில் இல்லாத எகர ஒகரக் குறில் எழுத்துகள் பிராகிருத பாலி மொழிகளில் உள்ளன. எகர ஒகரக் குறில் எழுத்துகள் தமிழில் அடிப்படையான பொருள் வேறுபாட்டை விளைப்பன என்பது நாம் அறிந்ததே. தென்–தேன்; தொல்-தோல் என்பன முற்றிலும் பொருள் வேறுபாடுடைய சொற்கள்.

தமிழில் ஷ, ஜ, ஹ போன்ற ஒலிப்புகள் தமிழ் ஒலிகளாக மாற்றப்படுவது போன்றே பிராகிருதத்திலும் இவ்வெழுத்துகள் திரிபடைகின்றன. சமற்கிருத அனுசுவார ஒலி தமிழில் இல்லை. பிராகிருதத்திலும் அனுசுவாரம் தனி எழுத்தாகக் கொள்ளப்படவில்லை என்று பிராகிருத இலக்கண ஆசிரியரான ஏமச்சந்திரர் கூறுகிறார். பிராகிருத மொழிக்கென தனியெழுத்து வடிவத்தைத் தோற்றுவிக்காமல் வடமொழி ஒலிப்புக்குரிய தேவநாகரி எழுத்துகளால் எழுதப்பட்டதே பிராகிருத மொழியின் உண்மையான ஒலிப்பு பிராகிருத நூல்களில் காணப்படாததற்குக் கரணியமாகும்.

பிராகிருத மக்கள் இந்தோ ஐரோப்பிய இனத்தவராக இருந்திருந்தால் அவர்களுக்கு கஜ, (யானை), ப்ரிய (அன்பு) எனும் சொற்களை

உள்ளபடியே ஒலிப்பது எளிமையாக இருந்திருக்கும். வட இந்தியா முழுவதும் வாழ்ந்த மக்கள் திரவிடராக இருந்திருந்ததால்தான், அவர்களால் அத்தகைய சொற்களை ஒலிக்க இயலாமல் 'கஜ', 'கய' என்றும், 'ப்ரியம்' என்பதை 'பியம்' என்றும் ஒலிக்கத் தொடங்கினர். சமற்கிருதச் சார்பான சிறப்பு எழுத்துகளை அனைத்துப் பிராகிருதப் பிரிவினரும் தம்மியல்புக்கு ஏற்ப எளிமையாகத் திரித்தே வழங்கியுள்ளனர். பெரும்பான்மைச் சொற்கள் மட்டுமன்றி வேற்றுமை உருபுகள், எண்ணுப் பெயர்கள், இனச் சொற்கள் ஆகியவை கூட ஆரிய இனச்சொற்களாக வழக்கூன்றி விட்டதால் பிராகிருதத்தை ஆரிய இன மொழிகளில் ஒன்றாகச் சேர்த்து எண்ணுகின்றனர். அச் சொற்றொகுதி முழுதும் இயல்பு மாறி ஒலிக்கப்படுவதிலிருந்தே அவை செயற்கையாகப்புகுத்தப்பட்ட சொற்கள் என்பதைக் காட்டிக் கொடுத்துவிடுகின்றன. இந்தோ ஐரோப்பிய இனமொழிகளாகக் கருதப்பட்டுவரும் வட இந்தியாவின் மொழிகளுள் குசராத்தியும், மராத்தியும் 12-ஆம் நூற்றாண்டு வரையில் ஐந்திரவிட மொழிகளுள் (பஞ்ச திராவிடம்–தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி, குசராத்தி) வைத்தெண்ணப்பட்டன. கங்கைச் சமவெளிப் பகுதி கௌட தேயமென்றும்; ஏனைய இந்தியப்பகுதி திரவிட தேயமென்றும் கூறப்பட்டு வந்தன. இவ்வுண்மைகள், வட இந்திய மொழிகள் படிப்படியாகத் திரவிட குடும்பத்திலிருந்து, இந்தோ ஐரோப்பிய குடும்பத்திற்கு மாற்றப்பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்துகின்றன.

சமற்கிருதச் சாய்கால் மிகுந்த காலத்தில், பிராகிருதக் கிளைமொழிகள் (தேசி மொழிகள்) நாட்டு மொழி என இகழப்பட்டன. பிராகிருத இலக்கண இலக்கிய நூல்களினும் தத்பவ தத்சம சொற்கள் சமற்கிருதத்திலிருந்து நிறைய எடுத்தாளப்பட்டு நாட்டு (தேசி)ச் சொற்களான பேச்சுமொழிச் சொற்களுக்கு மிகக்குறைந்த இடம் அளிக்கப்பட்டது. காளிதாசன், பாணன் போன்றோரின் சமற்கிருத நாடகங்களில் மகளிரின் உரையாடலும், வேலைக்காரரின் உரையாடலும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன.

பாஞ்சாலத்தில் பிராவாகன சைவலி என்னும் திரவிட மன்னர் ஒரு கல்விக் கழகம் வைத்திருந்தார். இக் கழகத்தில் கௌதமர் முதலிய ஆரிய முனிவர் தமிழ் நூல்களைக் கற்றனர். இச்செய்தி சாந்தோத்திய உபநிடத்தில் (5-ஆவது பிரவர்கடம், 3-வது காண்டம்) உள்ளது; ஆப்கானித்தானத்தில் தமிலுக் என்று ஒரு நகரம் இருக்கிறது.

பிராகிருத இலக்கியங்களில் தென்பொதியம் எனப்படும் மலையத் தென்றல் குறிப்பிடப்படுகிறது. வடநாட்டிலிருந்த உடன் கட்டை

யேறுதல் எனும் வழக்கம் பழந்தமிழரிடை ஆஞ்சிக் காஞ்சி எனும் பெயரால் குறிக்கப்பட்டது. பூதப் பாண்டியன் இறந்ததும் அவன் பெருந்தேவி உடன் கட்டையேறினாள். கண்ணன் ஏறுதழுவி நப்பின்னையை மணந்தது, பழந்தமிழர் நெறியே.

பிராகிருத இலக்கியங்களிலுள்ள அகப் பாடல்கள் துறை குறிக்கப்படாததாக இருப்பினும் தமிழிலக்கிய அகத்துறைகளுக்குப் பொருந்தப் பாடப்பட்டனவாக உள்ளன. பொருள் வயிற் பிரிதல், நினைந்தவர் புலம்பல், இற்செறித்தல், பாங்கன் கூற்று, பாங்கி கூற்று, நற்றாய் கூற்று, செவிலி கூற்று போன்றவை செம்மையாக அமைந்துள்ளன. பாலி நூல்களில் தமலிகா என்னுஞ்சொல் இந்தியா முழுவதையும் குறிப்பதாக உள்ளது என்று கூறப்படுகிறது.

அநிருத்தன் மணந்து கொண்ட உழை (உஷை) சேரமன்னனான மாவலியின் மகள் பிள்ளை, பேர்த்தி என்றும், அவன் ஆண்ட நாட்டின் தலைநகர் பம்பாய்க்கு வடக்கிலிருந்த சோணிதபுரம் என்றும் கூறப்படும் பழைய கதை வரலாறு, சேரரின் கிளை மரபினர் வடநாட்டிலிருந்தாண்டனர் என்பதைக் காட்டுகிறது.

பாரதப்போரின் போது இருதிறத்துப் படைகளுக்கும் பெருஞ்சோறளித்த சேரலாதன் வரலாறும் வடநாட்டிலிருந்த தமிழ்க்கிளை மரபினர் செயலையே குறிப்பது என்று கூறுகின்றனர். கடல்கொண்ட குமரிக் கண்டத்திலிருந்த தென் மதுரைக்கு ஒப்ப வட இந்தியாவில் வடமதுரை தோற்றுவிக்கப்பட்டது. வடமதுரையைத் தோற்றுவித்தவர் குமரிக் கண்டத்திலிருந்து வடஇந்தியாவில் குடியேறிய தமிழ் மரபினரேயாவர்.

கி. பி. 1854-இல் சிறந்த மொழிநூலறிஞராக விளங்கிய பாபு இராசேந்திரலால் மித்ரா என்பவர் திராவிட மொழி, பிராகிருத வகைகளுள் ஒன்று என்கிறார். [1]

[2] சிந்துச் சமவெளியின் வடமேற்குப் பகுதியில் சிபி என்னும் மன்னன் ஆண்டதாகப் பழங்கதை வழங்கிவருகிறது. சீலம் சீனாப்

---

1. As late as 1854 the larned philologist Babu Rajendralal Mitra (quoted by Dr. Muir) speaks of the Dravidi as one of the recognised Prakrits equally with the Sowraseni and as being like it, the parent of some of the vernaculars of India. (Linguistics and Dravidian Philology page-146. by Prof. P. V. Ulahannan Mappila.

2. இந்திய வணிக நெறிகள் (பக். 51) —மோதிசந்திரர்.

ஆற்றிடைப் பகுதியில் சிபி வழியினர் எனப்படும் குலத்தாரும் இருந்தனர். சிபி தமிழ் மன்னன் என்பது அனைவரும் அறிந்ததே. செம்பியன் எனுஞ் சொல்லே சிபி எனத் திரிந்ததாகக் கூறுவர்.

வேத நூல்களில் அசுரர் எனக் குறிக்கப்பட்டவர் பாரசீக செந்து அவெத்தறி எனும் நூலில் நல்லவர்களாக அறிமுகப்படுத்தப்படுகின்றனர்.

[3] பிராகிருத மொழிகளுள் பிசாசி பிராகிருதம் என்பது மிகப் பழமையானது. கிரேக்க நிலநூல் வல்லுநர் இந்தியாவிலிருந்த பசியாணி எனப்படும் பசாயி குலத்தாரைப் பற்றி அறிந்திருந்தனர். பிசாசி எனும் பெயர் கொண்ட ஆந்திர மன்னர் பலரிருந்தனர். இச்சொல் அக்காலத்தில் உயர்ந்த பொருள் குறித்தது,

பிராகிருதத்துக்கும் தமிழுக்கும் உள்ள ஒப்புமைகள்:

1, எகர ஒகரக் குறில் இருத்தல்.

2, சமற்கிருதத்துக்கே உரிய ர்ரு, ர்ரூ, ல்ரு போன்ற உயிரொலிகளும், அம், அஹ எனும் உயிரின ஈற்றெழுத்துகளும் பிராகிருதத்தில் இல்லை; தமிழிலும் இல்லை.

3. சமற்கிருத மொழிக்கு முற்றிலும் புதிதான பல சொல் வடிவங்கள் இறந்துபடாமல் பிராகிருதத்தில் எஞ்சியுள்ளன. பூதர் எனும் சொல் அத்தகைய சொற்களுள் ஒன்று. இது சமற்கிருத மொழியில் இல்லாத சொல் என்று பிராகிருத இலக்கண நூலாசிரியரான ஏமசந்திரர் குறிப்பிடுகிறார்.[4]

ஆனல் பூதர் என்னும் சொல் தமிழிலக்கியங்களில் மிகுந்த ஆட்சி பெற்றுள்ளது. பூ-பூத்தல் (தோன்றுதல்) எனும் வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது இது, அவை நடுவே வெறுமனே தோற்றம் தரும் அறிவிலிகளையும் இச்சொல் குறித்தது.

4, ஐந்திரம் என்னும் இலக்கண நூல் தமிழுக்கும் பிராகிருதத்துக்கும் பாலிக்கும் பொதுவான இலக்கண நூலாகக் கூறப்படுகிறது. ஐந்திர இலக்கண நெறியே காதந்திர (சமண) இலக்கண நெறி, கச்சாயன (பௌத்த)

---

3. இந்திய வணிக நெறிகள் (பக். 180)
4. The word 'Puthar' is unknown to Sanskrit language, Prakrit grammar. page 63 (Hemachandra)

இலக்கண நெறிகளாக வளர்ந்தன. சாரிபுத்தர் இளமையில் ஐந்திர இலக்கணங் கற்றார், குணாட்டியர் காலத்திற்கு முன்பே ஐந்திரம் வடமொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. பாணினியம் தோன்றியபின் ஐந்திர நூல் அழிந்தது என்று பர்னல் எனும் அறிஞர் கூறுகிறார்.

தொல்காப்பியர் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று கூறப்படுகிறார். மாபாரத உரையாசிரியராகிய தேவபோதர் ஐந்திர இலக்கணம் பாணினி இலக்கணத்தைவிட 25 மடங்கு பெரியது என்கிறார்.

பர்மியம், சயாம், சாலித்தீவம், சாவா, கம்போடியா நாட்டு மொழிகளில் பௌத்த சமயம் பரவியதன் விளைவாக பாலி மொழியின் வாயிலாக ஐந்திர இலக்கணக் கூறுகள் பரவின, [5]

இந்திர வியாகரணம் (ஐந்திரம்) மிகப்பழையது. அது தமிழ்நாட்டில் வழங்கியது. இந்திர துருவன் என்பவன் ஐந்திரம் கற்றவன்: அவன் கற்றது 25,000 சுலோகங்களைக் கொண்டிருந்தது. [1] ஆங்கிலம் போன்ற ஆரியக் குடும்ப மொழிகளில் உயிர் எழுத்துகளைத் தனியாகவும், மெய்யெழுத்துகளைத் தனியாகவும் வரிசைப்படுத்திக் கூறும் வழக்கு இல்லை. சமற்கிருதத்தில் மட்டும் எழுத்து வரிசைகளில் உயிர் வரிசை தனியாகவும். மெய் வரிசை தனியாகவும் நிற்பது ஐந்திர இலக்கணத்தின் தாக்கமேயாகும்.

5. பிராகிருதத்தில் இரண்டாம் எழுத்தாகவரும் ககரம் மெலிந்து ஒலிக்கும் (K - G) (Loka - Loga) தமிழிலும் சொல்லின் முதலியல் அல்லது வல்லின மெய்யைச் சாராத வல்லெழுத்து மெலிந்து ஒலிப்பது இயல்பாக இருக்கிறது. அகம் (Agam) நகம் (Nagam) எனும் சொற்களை நோக்குக.

மேற்கூறியவாறு இரண்டாம் (வல்லெழுத்து) எழுத்து மெலிந்து ஒலிக்காமலிருக்கும் சமற்கிருதச்சொற்கள், பிராகிருதத்தில் புகுந்தால் அவை மெலிந்து ஒலிப்பனவாக அல்லது வேறெழுத்தாக மாறி விடும். காச (Kacha) மணி எனும் சொல் பிராகிருதத்தில் காயமணி என்று திரியும். பாதால (Pathala) பாயால எனத்திரியும். தமிழிலும் இவ்வாறே மெலிந்து ஒலிப்பதைக் காண்க.

7, பிராகிருதத்தில் ஒரே ச (Sa) தான் இருக்கிறது, சமற்கிருதத்திலுள்ள ஸ, ஷ எழுத்துகள் இல்லை. தமிழிலும் ஒரே சகரம்தான்

5. ஐந்திரம்–பக். 72. —(க. ப. அறவாணன்.)

1. தாரா நாதரின் இந்தியாவில் புத்த சமய வரலாறு.
—பக்கம் 296.

உண்டு. ஸ்தூல எனும் சொல் பிராகிருதத்தில் தோரம் எனத்திரியும். ஸ்த்ரீ (பெண்) பிராகிருதத்தில் இத்தி எனத்திரியும்.

8, வடமொழியில் உள்ள அனுசவாரம் எனப்படும் மூக்கொலி சுன்னமாக (o) க் குறிக்கப்படாமல் பிராகிருதத்தில் இனமெல்லெழுத்தாக எழுதப்படும். சமற்கிருதத்தில் சிம்ஹ (Simha) எனுஞ்சொல் பிராகிருதத்தில் தமிழைப்போலவே சிங்க(ம்) என இன மெல்லெழுத்திட்டு எழுதப்படுகிறது, ஆதலால் ஏமச்சந்திரர் அனுசுவாரத்தைத் தம் பிராகிருத இலக்கண நூலில் எழுத்து வரிசையில் குறிப்பிடாமல் ஈற்றில் குறிப்பிடுகிறுர்; இதன் வாயிலாக வடமொழி இலக்கணக் கூறுகள் பிராகிருதத்திற்குப் பொருந்தாமலிருப்பதை அவர் சுட்டிக் காட்டுகிறுர்.

9, சமற்கிருதத்தில் விணைச்சொற்களின் முதனிலைகள் வல்லின மெய்யீருக நிற்பதுபோல் பிராகிருதத்தில் நிற்பதில்லை. அவை தமிழ்ச் சொற்களைப் போன்றே உயிரீருக நிற்கின்றன,

10. பிராகிருதத்திலிருந்து திரிந்த மாகதியில் ஸ்க, ஸ்ப, ஸ்த எனும் ஒலிகள் புகுந்துவிட்டன. ஆனுல் இவ்வொலிகள் பிராகிருதத்தில் புகவில்லை. பிராகிருத மொழி பற்றிக் கூறும்போது இம்மொழியில் சொற்கள் மிகுதியாக நாட்டு மக்களின் பேச்சு மொழியிலிருந்து வந்தவையாதலால் இவற்றை வடமொழிச் சொற்களோடு ஒப்பிட முடியாது என்று கிரியர்சன் கூறுகிறுர், [2]

11, தமிழில் மொழி முதலாகாத எழுத்துகளைக் கொண்ட வட சொற்கள் தமிழில் வரின் முன்ஞல் உயிரெழுத்து கூட்டி ஒலிக்கப் படுவது ராம-இராமன் போன்றே பிராகிருத மொழியின் வழிவந்த மராத்தி மொழியில் 'ஸ்நான' எனுஞ்சொல் அஸ்நான என உயிரெழுத்து கூட்டி ஒலிக்கப்படுகிறது,

சொல்லொப்புமைகள் :

தமிழிலுள்ள பெண்டு எனுஞ்சொல் பிராகிருதத்தில் பிட்டி எனத் திரிந்துள்ளது. விடலை 'இளைஞன்' எனுந் தமிழ்ச்சொல் வட (Vata) எனத் திரிந்துள்ளது,

இவற்றையொத்த பிற சொற்கள் :

அளிகுலம் (வண்டுக்கூட்டம்)
படன்தி (பட்டது-கீழே விழுந்தது)

---

2. Linguistic Survey of India (Page-659.)
(Sir George Grierson.)

துவரி (துவரை, துவரம் பருப்பு)
அண்ணு (அண்ணன்)
ஐயா (ஐயன்)
மாமி (அத்தை)
அத்தா (அத்தை)
குட (குடம்)
கோட்டம் (கொட்டகை)
மரவு (மறைதல், சாதல்)
பாவல் (பவளம்)
கடம்ப (கடம்ப மரம்)
ஆமர (மா மரம்)
தால (பனை மரம்)
குவளய (குவளை மலர்)
பலாச (பலா மரம்)
வகுள (வகுள மலர்)
மாலதி (மாலதி மலர்)
தாமரச (செந்தாமரை)
வராயியே (வரைக, எழுதுக)
காக (காக்கை)
மலாரி (பூமாலை விற்பவன், பூக்காரி)
வேளம் (வேளை)
மை (கருமை, அழுக்கு).
தேம (தண்மை)-ஈரம்.

சமற்கிருதம் பிராகிருதத்திற்கு மூலமன்று:

*பிராகிருதச் சொற்கள் உண்ணாட்டுச் சொற்கள் '**தேசி**' என வடமொழியாரால் புறக்கணிக்கப்பட்டன, உண்ணாட்டு மொழிகளான பல்வகை பிராகிருதங்களும் தம்மியல்பில் இயங்கத்தக்க இலக்கணக் கட்டுக்கோப்பும், தனித்த இலக்கிய வளமும் கொண்டிருந்தன. அதனாற்றான், பிராகிருதம் சமற்கிருதத்தினின்று தோன்றிய மொழியன்று என்றும், தனக்கென தனித்த இலக்கண நெறியுடையது என்றும், திரிவிக்கிரமன் என்னும் பிராகிருத ஆசிரியர் பிராகிருத சப்தானுசாசனம் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.*

பிராகிருத இலக்கிய வரலாறு எழுதிய சகதீச சந்திர செயின் என்பவரும், இதனைத் தம் நூலில் மேற்கோள் காட்டி, சமற்கிருதம்

பிராகிருதத்திற்கு அடிப்படையும் அன்று; மூலமானதும் அன்று என்று தெளிவுபடுத்துகிறார்.[1]

குமரி முதல் இமயம் வரை பேசப்பட்ட மொழிகள் அனைத்தும் பிராகிருத மொழிகளாகக் கருதப்பட்டன, குணாட்டியர் பிசாச பிராகிருதத்தில் இயற்றிய பெருங்கதை(பிருகத் கதா)வடமேற்கு இந்தியாவில் குறிப்பாகக்காசுமீரப் பகுதியில் நிகழ்ந்த வரலாற்றை ஒட்டியது என்றும், அந்நூலில் உள்ள இயற்கை வண்ணனை காசுமீர நிலப்பகுதிகளையே சுட்டுவன என்றும், பிராகிருத ஆசிரியர் கூறுகின்றனர். இன்றும் வடநாட்டில் திரவிட மொழிகளைப் பேசும் மக்கள் பரவலாக வாழ்கின்றனர்.

வடமொழியில் வடதமிழ்ச் சொற்கள்:

வட சொற்கள் தமிழில் வந்து வழங்குதற்கான நெறிமுறைகளைத் தமிழிலக்கணங்கள் கூறுகின்றன, இதைப்போலவே, தமிழ்ச் சொற்கள் சமற்கிருதத்தில் வழங்குவதற்கான நெறிமுறைகளை தி, பி, 831-இல் வாழ்ந்த குமாரில பட்டர் தம்முடைய தந்திர வார்த்திகம் என்னும் நூலில் கீழ்க்காணுமாறு கூறுகிறார்,

ஆரிய வர்த்தத்தில் வாழும் ஆரியர்க்குத் தெரியாதனவாயும், ஆயின் அங்குள்ள மிலேச்சருக்குத் தெரிந்தனவாயும் உள்ள சொற்கள் சமற்கிருதத்தில் வழங்கத் தக்கனவாகும். அவற்றைச் சமற்கிருதத்தில் வழங்குமுன் ஏற்புடைய சில மாற்றங்களைச் செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு சேர்த்துக் கொள்ளத்தக்க சொற்களுட் சில :

வடநாட்டுப் பேச்சுமொழிச் சொல்		சமற்கிருதத்தில் சேரும்போது பெறும் மாற்றம்
சோறு	—	Cor.
பாம்பு	—	Pamp.
வயிறு	—	Vair.
நடை	—	Nader. (இடைகழி)
ஆள்	—	al.

இதனைக் கன்னட அகரமுதலியின் முன்னுரையில் கிட்டல் பாதிரியார் எடுத்துக் காட்டியுள்ளார். 'வடபாடைக்கண் தமிழ் செல்லாது' என்ற சேனாவரையர் இதனை அறியாராயினர். கிட்டல் பாதிரியார் சற்றேறப்ப 400 திரவிடச் சொற்கள் வடமொழியில் திரிபுற்று வடசொல் போலவே வழங்கப்பட்டு வருவதை எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆரிய வர்த்தம் எனப்பட்ட வடஇந்தியாவில் பேசப்பட்ட மேற்கண்ட சொற்கள் அழகு தமிழ்ச் சொற்களாக இருத்தலைக் காண்க தமிழர் பனிமலை வரை பரவியிருந்தனர் என்பதற்கு இது தலையாய சான்றாகும், o

1, Prakrwt Sahitya ka ityhas - (Hindi page-17).
-Dr. Jagadeesh Chandra Jain.

[சுவடி: 14, ஓலை: 1 இதழின் தொடர்ச்சி.]

திருவள்ளுவர் யார்?

சேலம், புலவர். க. நடேசனார்

இங்ஙனம் கூறுவாரை மறுத்துப் பின்வருமாறு பேசுதலும் ஆம். மநு நூலின் தொடக்கத்தில் உலக உற்பத்தி பேசப்படுகிறது உண்மையே. இங்ஙனம் நூல் தொடக்கத்தில் உலக உற்பத்தியைப் பற்றிக் கூறுதல் ஒருவகை நூல் மரபு; மறை இயல்பு. இவ்வியலைக் கிறித்துவ மறை நூலின்—விவிலியத்தின்—தொடக்கத்திலும் காணலாம். வள்ளுவர் அறநூலும் முதற் குறளில் உலக உற்பத்தியைப் பற்றியே பேசுகிறது. இம்முடிவு ஏற்கக் தக்கதே; எவரும் இணங்கத்தக்கதே. ஐயமில்லை. ஆனால் வள்ளுவர் பேசும் முறை வேறு. மநு பேசும் முறை வேறு. தொடக்கமே வேறு. உலகத் தோற்றத்தைப் 'பிரகிருதி' தத்துவத்தில் தொடக்கி வருணாசிரமப் பிரிவுரவில் முடிக்கிறது மநு நூல். நாத தத்துவத்தில் தொடக்கிப் பிரிவினையற்ற ஒப்புரவில் முடிக்கிறது குறள் நூல். அகரம் நாத தத்துவத்தின் செயற்பாடு என்பதைப் பரிமேழகர் உரையும் குறிப்பிடும். "அகரத்திற்குத் தலைமை நாத மாத்திரையாகிய இயல்பால் பிறத்தலான் கொள்க" (1) எனவரல் காண்க. உலகத் தோற்றத்திற்கு நாத தத்துவத்தைத் தொடக்கமாகக் கொள்வார்க்குத் தத்துவங்கள் 36. பிரகிருதி — பகுதி — தத்துவத்தைத் தொடக்கமாகக் கொள்வார்க்குத் தத்துவங்கள் 25; அல்லது 26. மநு, கீதை ஆகிய நூல்களின் உயிர் நாடி விபக்த வருணாசிரம தர்மப் பிரிவுரவு; குறள் நூலின் உயிர் நாடி அவிபக்த ஒப்புரவு. ஆதலின் மநு நூலும் குறளும் கிழக்கும் மேற்கும் போல எதிர்மாறானவை. நாத முதல் 36 தத்துவங்கொண்ட இந்நாட்டு ஆகம நெறியார், தென்னனை — ஆசாரிய மூர்த்தியை—சிறப்பாகத் தொழுவர்; அவதாரங்களை ஏலார். வைதிக வைணவ நெறியார், அவதார மூர்த்திகளை—தசாவதாரங்களை—சிறப்பாகக் கொண்டு தொழுவர். வள்ளுவர், உலகத் தோற்றத்துக்கு நாத தத்துவத்தைத் தொடக்கமாகக் கொண்டவர் என முதற் குறட்பாவாலேயே தெரியவருதலால், அவர் பத்து அவதாரங்களுள் ஒன்றான கண்ணபிரானை ஏலார். எனவே, 'பொறி வாயில் ஐந்தவித்தான்' என்னும் தொடர், 'தென்னன்' என மாணிக்கவாசகராலும் 'தட்சிணாமூர்த்தி' என மற்றும் பலராலும் போற்றப்படும் ஆசாரிய மூர்த்தியையே—ஆலமர் கடவுளையே—தென்னெறித் தலை

வனையே — குறிக்கும். கண்ணபிரானைக் குறிக்காது. 'பொய்தீர் ஒழுக்க நெறி' என்பதும் அத் தென்னன் கூறிய பழந்தமிழ் நான் மறையையே குறிக்கும். 'ஆல நிழற்கீழ் அறநெறியை நால்வர்க் கும் மேலை உகத்துரைத்தான் மெய்த் தவத்தோன்' எனத் திருமாலடி யரே, தென்னனை 'மெய்த் தவத்தோன்' எனல் காண்க. இம் மெய்த்தவன் —'பொறிவாயி லைந்தவித்தான்'—மேலையுகத்தில் நால் வர்க்குக் கூறிய பழந்தமிழ் அறநெறியே 'பொய் தீர் ஒழுக்க நெறி' ஆகும். இப் புது யுகத்தில் தோன்றிய கீதையும் ஆகாது; மநு நூலும் ஆகாது. இவற்றை எல்லாம் இன்னும் சிறிது விளங்க நோக்குவோம்.

இங்கு அகரம் நாத தத்துவத்தின் செயற்பாடாவது எப்படி? எனச் சிலர் கேட்கலாம்; விளக்குவேன். கருத்துக்கும் எழுத்துக்கும் இடையே நீங்காத தொடர்புண்டு என ஆகம நூல்கள் கூறும். சொல்லின் உதவியின்றி மனத்தில் கருத்துகள் தோன்றுவதில்லை. ஆதலின் கருத்துக்குச் சொற்கள் காரணம். இச்சொற்களுக்கு எழுத்துகள்—எழுத்தொலிகள்—காரணம். இவ்வொலிகள் பல. இப் பலவகை ஒலிகட்கும் மூலகாரணமான ஒலி அகர ஒலி. புறத்தே காதுக்குப் புலப்படும் எழுத் தொலிகட்கு மூலமாய், அகத்தே அறி வின் கண்ணுள்ள நுண்ணிய அகர ஒலியே கருத்துகள் தோன்று வதற்குக் காரணம் என்பது ஆகமக்கொள்கை. இந்த நுண்ணிய அகர அக ஒலி, உயிரின் பக்குவத்துக்கு ஏற்ப நுண்ணிய கருத்தை எழுப்ப, அக் கருத்துக்கேற்ற பரவுடல் ஒன்று இறையாற்றலால் மாயையிலிருந்து திரட்டித் தரப்படுகிறது. பின் இவ்வுடலை ஒட்டி நுண்ணுடல் அமைகிறது. நுண்ணுடலை ஒட்டிப் பரு உடல் அமை கிறது. இவ்வுடம்புகளையுற்ற உயிர்களின் வினைக்கும், வாழ்வுக்கும், நுகர்ச்சிக்கும் ஏற்ற உலகமும் நுகர் பொருள்களும் அமைவதற்கு இறையாற்றல் இடையே இணைந்து நின்று துணைபுரிகின்றது. எனவே அகர அகநுண்ணொலி, எழுத்து, கருத்து, உடல், உலகு ஆகியவற்றோடு வழிவழியாய்த் தொடர்புற்றுத் தத்துவக் காணிய மாக நிற்கிறது என்பர் ஆகம அறிஞர். இக் கருத்துகளையெல்லாம் நன்குணர்ந்த தென்னெறித் திருமூலர்,

"தத்துவம் ஆவ தகார எழுத்தே" –2180

எனக் கூறுதல் காண்க. 'அகார' எழுத்து எனப் பிரிப்பினும் 'தகார' எழுத்து எனக்கொள்ளினும் கருத்தொன்றேயாம். தகாரம்,

தஹறம், நுண்மை என்பன ஒரு பொருட் சொற்கள். 'தகராலயம்', 'தகராகாயம்' என்று நூல்களில் பயின்றுவரல் உண்டு. எனவே, திருமூலர், அகர நுண்ணொலியைத் தகார எழுத்து-நுண்ணெழுத்து —எனக் குறித்துள்ளார். 'தகார எழுத்தே தத்துவம் ஆவ' ('தத்துவம் ஆவது அகார எழுத்தே') எனுமித் திருமந்திரமும், அகர எழுத்தே எண்ணம், உடல், தத்துவம், உலகம் எல்லாவற்றிற்கும் கருவியாய் வழிவழித் தொடர்புற்று நிற்கும் என்பதைப் புலப்படுத்தல் காண்க. மாடு போன்ற விலங்கினங்களும தம் கருத்தைப் புலப்படுத்த வாய் திறக்குங்கால் 'அ' எனும் ஒலி முதலில் உண்டாவதும் நோக்குக. இப் புற ஒலிக்குக் காரணமாய் அகர அக ஒலி ஒன்று அவ்வவ்வுயிர்களின் அகத்தே உண்டென நாமும் ஊகிக்கலாம். இவ் வறிவக ஒலியே, படிப்படியாய் வளர்ந்து முன்னேறிய அறிவுடை மக்களிடத்தில் நாளடைவில் பல்வகை எழுத்தாகவும் பேச்சாகவும் மொழியாகவும் நூலாகவும் வளர்வதற்குக் காரணமாயிற்று என்பதும் ஆகமங்களின் கருத்து. இக்கருத்தின் உண்மையும் தன்மையும் எவ்வாருயினும்—இதுபற்றி இன்றைய மொழி நூலார் கருத்து எங்ஙனமாயினும்—இத்தகைய தத்துவக் கோட்பாடொன்று தமிழ்நாட்டில், நூல்களில், பயின்றிருந்த தென்பதை எவரும் மறுத்தற்கு இயலாது. இதுவே இங்கு இப்போதைக்குப் போதுமானது.

இதனுல் காட்சியுலகுக்குக் காரணம் கருத்துலகு; கருத்துலகுக்குக் காரணம் மொழி. மொழிக்குக் காரணம் எழுத்தொலிகள். இவ்வொலிகட்குக் காரணம் அகர நுண்ணொலி. இவ்வொலியை நாத தத்துவத்திலிருந்து தோற்றுவிப்பதும் உயிரிடைச் சேர்ப்பிப்பதும் முதல்வனின் அறிவாற்றல். ஆதலின் இவ்வாற்றலைத் தன்னுட்கொண்டுள்ள கடவுளே—பகவனே—எல்லா உலகத்துக்கும் முதற் காரணம்; எல்லாத் தத்துவங்கட்கும் ஆதிகாரணன் ஆவன். 36 தத்துவங்களும், தூல சூக்கும பரம் எனப் பிரிவுபடுவதுபோல, இவ்வுடம்புகளும் தூல உடல், சூக்கும உடல், பரவுடல் எனப் பிரிவுறும். மக்களின் மூவகை உடம்பிலும் 36 தத்துவங்களும் நேர் முகமாகவோ மறைமுகமாகவோ செயற்படுகின்றன. ஆதலின் எல்லாவற்றிற்குப் காரணம் நுண்ணிய அகர அகவொலி. இதற்கும் காரணம் நாதம் எனப்பெயர் பெறும் முதல் தத்துவம். இதை இயக்கும் ஆதி—காரணன்—பகவன் என அறியலாம்.

அகரமும் அதனுலாகிய எழுத்தோசைகளும் சொற்களும் நாத தத்துவத்தின் செயற்பாடு. சுத்த மாயையின் விருத்தி என்பதைச்

சிவஞான முனிவரும் தம் பாடியத்தில் பல இடங்களில் பின்வருமாறு கூறி விளக்குவர் :

> *எழுத்தோசை வேறு; கடலொலி போன்ற இசையோசை வேறு; எழுத்தோசை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என நான்கு வகைப்பட்டு வாக்காகி ஒன்றற்கொன்று காரணமாய் உணர்விற்கு ஏதுவாய்ச் சுத்த மாயையின் (நாத விந்துக்களின்) விருத்தியாம். இவ்விருத்திக்குக் காரணம் சுத்த மாயையில் நாத தத்துவத்தைத் தோற்றுவிக்கும் முதல்வனது சிற்சத்தியே. அறிவக முயற்சியால் பிறப்பது எழுத்தோசை. புற முயற்சியாற் பிறப்பது இசையோசை. எழுத்தோசை உள்ளிருந்து வெளிப்பட்ட பின், புறத்தே எழும் இசையோசையின் அலைகள் அதனைச் சுற்றிலும் பரவச்செய்து, செவியின்கண் உய்த்துப் புலப்படுக்கும். இவற்றின் இயல்பெல்லாம் வழிநூல் புடைநூல்களில் விரித்தோதுதலின் ஆண்டுக் காண்க.*

இங்ஙனம் விளக்கிப் பலகூறுவர் சிவஞான முனிவர். மறைமலைஅடிகளாரும், "அசுத்தே அறிவொளி ஓசையாய் அழியாததாய் நிற்பது சூக்குமை, இது எழுத்தோசையே" என்பர் (சிவஞான போத ஆராய்ச்சி—பக். 312). கண்டு கொள்க.

இது இங்ஙனம் இருக்க, இனி ஷெ பிரகாசிகை நூலையும் அதை சுருக்கியவர் கூற்றையும் காண்போம். மனுதர்ம சாத்திரம் முதல் அத்தியாயம் 6-ஆம் செய்யுளில் தொடங்கி உலக உற்பத்தியைக் கூறுகிறது. அது "ததஸ்வயப்பூர் பகவான்" என்று தொடங்குகிறது. அப்பகவான் நாராயணனே—"தேந நாராயண ஸ்ம்ருதா" (1. 10) என முடிக்கிறது. வள்ளுவர் அறநூலும் இதைப் பின்பற்றியதே. ஆகலின்,

> *அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
> *பகவன் முதற்றே உலகு.*

என்னும் குறளும் உலக உற்பத்தியையே விவரிக்கிறது. ஆதலின் இதில் 'பகவன்' என்பதும் நாராயணனையே குறிக்கும். எனவே, உலக காரணன் நாரணன் என்று வள்ளுவர் முதற் குறளிலேயே கூறுவதால் திருவள்ளுவர் வைதிக வைணவர் என்பது அவர்கள் முடிவு (பிரகாசிகை பக். 21, 22 விநோதன் பக். 53).

மநுநூல் 6-ஆம் செய்யுட் பகுதியை—உலக உற்பத்தி கூறும் இடத்தை—"பகவானுனவர் பிரகிருதிப் பிரேரகராயும் பிரகாசித்தார்" என்று மொழிபெயர்த்துக் காட்டுவர், ஷி பிரகாசிகையார். பிறரும்—இராமாநுச ஆசாரியரும்—இங்ஙனமே மொழிபெயர்ப்பர். ஆதலின், இது சங்கிருத முதல் நூற் கருத்துக்கும் சொல்லுக்கும் ஒருங்கொத்து நிற்பதே. வைணவர் பிரகிருதியை இயக்கும் பகவன் உலக காரணன் என்பர். தென்னெறியர், நாத தத்துவத்தை இயக்கும் பகவன் உலக காரணன் என்பர். இதில் வள்ளுவர், எந்தப் பகவனை உலக காரணனெனக் கூறுகின்றுரென அவர் குறளேயே நோக்கிக் காண்போம். அகச் சான்றையே கண்டு ஒரு முடிவுக்கு வருவோம். வள்ளுவர்,

'எழுத்தெல்லாம் அகர முதல'

என்று தொடங்குகின்றுர். எழுத்தென்பன, கருத்தைத் தோற்றுவிக்கும் சொல்லுக்கு உறுப்பான — காரணமான — ஓசை என்பதை அறிஞர் நன்கறிவர். இவ்வோசைக்கெல்லாம் காரணம் அகர ஓசை என்பதையும் அறிவர். அகர ஓசைக்கு நாத தத்துவம் காரணம் என்பதையும் அறிவர். 'நாத தத்துவத்தை இயக்கும் முதல்வன் சிவன் எனக்கூறும் தென்னெறிச் சிவ நூல்கள். வள்ளுவருங்கூட இதைத்தான் கூறுகிறுர். எப்படி? (தொடரும்.)

உலகத் தமிழ்க் கழக 4-ஆவது பொது மாநாடு.

சென்னே.

உலகத் தமிழக் கழகத்தின் 4-ஆவது பொது மாநாடு. தி. பி. 2008 கன்னி (1977-செப்டம்பர், அக்டோபர்) த் திங்களில் சென்னே மாநகரில் நடத்தத் திட்டமிடப் பெற்றுள்ளது. எனவே, ஆங்காங்குள்ள மாவட்டப் பொறுப்பாளர்களும், தூய தமிழ்த் தொண்டுள்ளம் வாய்ந்த கழகப் பற்றுளர்களும். உடனடியாகப் பொதுச் செயலாளருடன் தொடர்புகொண்டு, தம்தம் வினைப்பாட்டு நிலேகளைத் தெரிவிப்பதுடன், மேற்கொண்டு மாநாடு சிறப்புற நடக்க ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேம்.

தி.பி. 2008, விடை 24
(6—6—1977.)

இறைக்குருவன்,
பொதுச் செயலாளர்:
உலகத் தமிழ்க் கழகம்.

தொடர்புகொள்ள முகவரி:
2, மேற்கு அரசர் தெரு, (West Raja St.) சென்னே-16.

தொடர் 3:

மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்.

—புலவர். இறைக்குருவனார்.

பொதுத்தொண்டர்

[1] மன்பதை நலஞ்சிறந் தின்புறத் தந்நலம்
மறுத்துத் துறந்துசற்றும்
[2] மடியரமி [3] மானமுங் கருதாது வந்துறும்
மலையனைய பலதலையவாம்
துன்பங்கள் தமையெலாம் நகையாடி மேற்கொண்ட
தூயவினை முற்றநன்றே
தொண்டுசெய் கின்றபெரு மாண்பினீர் எம்மனோர்
தொழநின்ற மாபெரியரீர்!
பன்மையாந் தொண்டினும் முன்மைய(து) அடிப்படைப்
பான்மையது நல்லறிவினைப்
பாங்குற விளங்குமா றேங்குவிப் பதுவெனப்
பலதுறையி னுஞ்சிறக்கத்
தன்மெய்ப் பெரும்புலமை நன்னெஞ்ச வுறுதியால்
தாளாண்மை கொண்டதகவால்
தக்கபணி யாற்றியொரு மிக்கபுகழ் உறுபெருந்
தலைவனைக் காத்தருள்கவே!

உ. செங்கீரைப் பருவம்.

11

தனித்தமிழ் அமுதமாய் இனித்திடும் பெற்றியைச்
சாற்றியள்[1] ளூறியொழுகத்
தாள் தூவல்[2] ஏந்தியெமை வாழ்விக்கும் இருகையுந்
தரையினில் ஊன்றிநிற்பப்

---

1. மன்பதை-உயர்ப்பண்மை.
2. மடியாது-சோம்பலுருது; 3. 'குடிசெய்வார்க்கு' எனுங் குறள் காண்க.

1. அள் - வாய் நீர்; 2. தூவல் - மையூற்றெழுதுகோல்

[3]பனித்திடு பெருங்கடல் அணிகின்ற பார்மகள்
[4]பார்த்திலா மைக்கிரங்கிப்
பாதமொன் [5]றிறையூன்றி யொருகலை நீட்டிநற்
பாங்கான தோற்றத்தொடும்
குனித்தபுரு வத்தினன் அம்பலத் தரசுநங்
கோனினைக் கண்டுவையங்
கூறுதமிழ் வீறுறும் எனவுவந் தாடல்செய்
கூத்தினிய நேர்த்தியதனைத்
[6]தினிக்கண்ண வர்க்கெலாங் காட்டுபே ரருளாள
செங்கீரை யாடியருளே!
தென்னா டெழுச்சியுற முன்னோடி யாயவன்
செங்கீரை யாடியருளே!

12

[1]இறாற்கண் ணிழிந்தசெந் தேனுற்ற [2]பெற்றத்தின்
இனியபாற் றீங்கட்டியை
இளையதன் குழவிக்கு மந்திவாய் ஊட்டுநல்
இரும்பொழிற் சூழல் யாண்டும்
[3]அருப்பண் முழக்கத் திருக்கழுக் குன்றத்(து)
அமர்ந்துறையும் எந்தையருளால்
[4]அயலவர வென்றுதிரு நெறிபே தறைக்கவும்
அருந்தமிழ் செழித்தோங்கவும்
[5]நறாச்சிந் தெழின்மலர் [6]வாய[7]சின் னம்மையும்
நற்றவச் [7]சொக்கப்பரும்
நஞ்செல்வ மென்றுநனி கொஞ்சிவிளை யாடிமகிழ்
நன்மதலை யாகிவந்தோய்

---

3. பனிப்பு-குளிர்ச்சி; 4. அடிகளார் இல்லத்தில் துணிச்செருப்பும், வெளியில் பாதக்குறடும் அணிதலின் வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்; 5. இறை-சிறிது; 6. தினி-மேதினி, தலைக்குறை.

1. இறால்-தேனடை; 2. பெற்றம்-ஆ(பசு); 3. அருப்பண்-பண் அரு - திருமுறை இன்னிசை ஓவாத; 4. அயலவர-அயலவர்களுடைய; 5. நறா-தேன்; 6. வாய-வாயையுடையாய்; 7. சின்னம்மை, சொக்கப்பர் - அடிகளாரின் பெற்றோர்;

[8]சிறுர்க்கினிய செந்தமிழ் தந்தபே ரருளாள
செங்கீரை யாடியருளே !
தென்ன டெழுச்சியுற முன்னேடி யாயவன்
செங்கீரை யாடியருளே !

13

[1]கொந்துபடு முத்தமிழ் மேன்மேற் செழித்தினிது
கொழுமையுற் ரேங்கிவளரக்
கூறுபிற மொழியிலுள பேரறிஞர் தங்கள்நூல்
கொழித்தெடுத் தாங்கவற்றை
நந்தமக் குரியதாய் மொழிவழக் கிற்கிசையும்
நடையிற் பெயர்த்துயாக்கும்
நன்முறை தெரிந்துயாம் பின்பற்ற வழிகாட்டி
நானிலத் தெதிரிலாத
வெந்திறல் மிக்குடையர் ஆங்கிலப் பெரியமொழி
வியன்புலவர் [2]அடிசன்செயும்
வீங்கிசைக் கட்டுரைகள் நூல்நயங் கண்டினிய
விரிதமிழில் மொழிபெயர்த்துச்
[3]சிந்தனைக் கட்டுரைகள் தந்தருள் [4]முருகவேள்
செங்கீரை யாடியருளே !
தென்ன டெழுச்சியுற முன்னேடி யாயவன்
செங்கீரை யாடியருளே !

14

உலகத் தியற்கையும் மக்கள்தம் இயற்கையும்
ஒண்மைமிகு நுண்ணறிவினல்
உற்ருழ்ந்து நோக்கிதன் காராய்ந்து [1]விழுமிய
ஓங்குறத் தேர்ந்துபெரிதும்

---

8 சிறுவர்க்கான செந்தமிழ், இளைஞர்க்கான இன்றமிழ் என்பன அடிகளாரின் நூல்கள்

மேனின்ருெழுதும் தேன் திருவருளாகவும், பெற்றத்தின் பாலுறை தமிழாகவும், தேனுறைந்த பாற்கட்டி திருமுறைகளாக வும், மந்தி குழவிக்கு ஊட்டுவது மெய்ந்நூலாசிரியன் மாணுக்கர்க்கு அருள் செய்வதாகவும் கொள்க.

1 கொந்து - கொத்து; 2. அடிசன் - ஆங்கிலப் பேரறிஞர் ; 3. சிந்தனைக் கட்டுரைகள் – அடிகளாரின் நூல்; 4. முருகவேள் – அடிகளாரின் புனைபெயர்: மேற்படி நூலில் இடம் பெற்றது.

நலமிக்க மொழிநடையில் உண்மையாம் அணியொளிர
நற்றமிழ் இலக்கியஞ்செய்
நாவீறு நனியிலகு மேலைநாட் புலவர்தம்
நயத்தக்க மாபெருமையும்
இலவாய வற்றையும் உளவேனுங் கோடியாய்
இயற்கையின் இறப்பப்புனை
ஏற்றமில் பிற்றைநாட் புலவர்தஞ் சிறுமையும்
[2]இருந்தமிழில் [3]ஆங்கிலத்தில்
[4]செலப்பேசி நூல்செய்த பேராண்மை யாளநற்
செங்கீரை யாடியருளே!
தென்னா டெழுச்சியுற முன்னோடி யாயவன்
செங்கீரை யாடியருளே!

15

பெருவாழ்வு பெற்றிலகு திருவார்ந்த செந்தமிழ்
பிழைப்புறு மயன்மொழிகளான்
பிணிப்புற்று நலிவுண்ட இழிநிலை தனைக்கண்டு
பெருகவும் நுணுகியாய்ந்தே
அருளாளர் வடலூரர் பாவுற்ற [1]தேகத்தை
அரியதமிழ் யாக்கையாக்கின்
அழகுநனி பொலியுமென அருமந்த [2]நன்மகட்(கு)
அறிவுறுத் தன்றுதொட்டுப்
பொருளாழம் மிக்கசொல் மலியிளந் தமிழினிற்
பொருந்தா வயற்சொற்களைப்
புகுத்தல் தவிர்த்தினிது தூய்தாய் வளர்க்கெனப்
புகன்றுபகை வென்றுநாட்டித்
[3]தெருளார்ந்த பலதுறை நூல்களுந் தந்தவர்
செங்கீரை யாடியருளே!
தென்னா டெழுச்சியுற முன்னோடி யாயவன்
செங்கீரை யாடியருளே!

---

1. விழுமிய – சிறந்தன; 2. முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவோர்; 3. Ancient and modern Tamil poets; 4. மேற்படி நூல்(கள்) சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டுத் தலைமைப் பொழிவு.

1. தேகத்தை – 'உற்ற தேகத்தை' என்னுந் திருவருட்பாவிலுள்ள 'தேகம்' என்னும் சொல்லை; 2. மகள்–திருவாட்டி நீலாம்பிகையம்மையார்; 3. தெருள்–தெளிவு.

செய்திகள்.

1. பாவேந்தர் விழா - மயிலாடுதுறை.

மயிலாடுதுறை உ.த.க. சார்பில், கடந்த மேழம் 26 (8—5—77) அன்று, மயிலாடுதுறை நகர்ப் பூங்காவில், ஊர்ப் பெரியவர், திரு. கோ. நாராயணசாமி அவர்கள் தலைமையில் பாவேந்தர் விழா கொண்டாடப்பெற்றது. உ,த.க. செயலர் வெ. புகழேந்தி வரவேற்புரை நிகழ்த்த, திருவாளர்கள்: ந. கிட்டப்பா, தி. இராமதாசு, மதிவாணன், திருக்குறள் பெருமாள், கதிர் - தமிழ்வாணனார் த. ச. தமிழனார் ஆகியோர் உணர்வுரைக்குப்பின், பாவலரேறு. பெருஞ்சித்திரனார் சிறப்புரை நிகழ்த்தினர், இறுதியில் தென்மொழி ப. முருகவேள் நன்றியுரை கூற விழா இனிது முடிவுற்றது.

2. பாவேந்தர் விழா—வேலூர். (வ.ஆ.)

வேலூர் பகுத்தறிவாளர்கள் சார்பில் கடந்த (15—5—77) ஞாயிறன்று, பாவேந்தரின் பிறந்தநாள் விழா வேலூர் நகரமன்ற அரங்கில் கொண்டாடப்பெற்றது. அன்று காலை 10 மணியளவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில், காரைக்குடி இராமசாமித் தமிழ்க் கல்லூரி முதல்வர் புலவர் திரு, ந. இராமநாதன் க. மு. அவர்கள் பாவேந்தர் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றியதுடன் 11 மணியளவில், 'பாவேந்தர் பாடல்களில் மேலோங்கி நிற்பது, மொழியுணர்வா, பகுத்தறிவுணர்வா' என்னும் தலைப்பில் நடந்த பட்டிமன்றத்திற்குத் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்திக்கொடுத்தார்கள். பட்டிமன்றத்தில் 'மொழியுணர்வே' என்னும் கருத்தில் பேராசிரியர் இரா. சோதிவாணன் க.மு., ச.இ. அவர்களின் அணித் தலைமையின் கீழ், திருவாளர்கள் ஐ. இளங்கோவன் க.மு., புலவர் சோ. சு. யுவராசன் அவர்களும், 'பகுத்தறிவுணர்வே' என்னும் கருத்தில் புலவர். திரு. குமர. தன்னொளியன் க.மு. அவர்களின் அணித் தலைமையின் கீழ், புலவர் திரு. த. பெ. சீவரத்தினம் க.மு. திரு. அடியார்க்கருளி. வணி. இ. அவர்களும் தருக்கமாடினர். மீண்டும் பிற்பகல் 6-30 மணியளவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் 'பாவேந்தர் காட்டிய கருத்து நலன்கள், என்னும் தலைப்பில் பாட்டரங்கம் சிறப்புற நடந்தது. பேரா, இரா. சோதிவாணன் க.மு. ச.இ. இயற்கை பற்றியும், திரு. வே. பதுமனார் க.இ. வீரம் பற்றியும், பாவலர். ப, அடியார்க்கருளி வணி.இ. இனம் பற்றியும் உணர்வுறப் பாடினர். இறுதியில் பாவலரேற்றின் முடிவுரைப் பாவுடன் இரவு 10-30 மணியளவில் விழா இனிது முடிந்தது. இவ்வரிய விழாவைத் தாம் ஒருவரே தமியராய் நின்று மிகச் சிறப்புற நடத்திய தி.க. தோழர் பா. நா. செந்தமிழ்க்கோ அவர்களின் ஈடிலா முயற்சியை எவ்வளவு பாராட்டினும் தகும்.

3. பாவேந்தர் விழா - புதுவை.

புதுவை, தமிழ்நிலச் சமவுடைமைக் கழகச் சார்பில், கடந்த (22—5—77) ஞாயிறு, புதுவை நகரமன்றத்தில் (Mairie) பாவேந்தர் விழா இனிது கொண்டாடப்பெற்றது. காலை 9 மணியளவில் புலவர்

பொழிப்பு : பிறர் செய்த நன்மைகளை என்றும் நிலைத்திருக்கின்ற தன்மையே நன்றியாகும். அவர் செய்த நன்மைகளை மறந்துவிடுதல் ஒருவரை எப்பொழுதும் ஒன்றுமில்லாத நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். அவர்பால் முன்னர் தாம் பெற்ற நலன் ஒன்றுதானே தம் பின்மை நிலைக்கு ஊற்றுப்போல் அமைந்தது என்று உணராதவர் அந்நன்றி மறந்து இடருறும் அன்றைக்கன்றோ மீண்டும் அதனை நினைந்து உய்வர்.

2. ON GRATITUDE.

Gratitude thinks of good done us ;
Failure to poverty'll lead us.
Past good is fount of the present.
He who knows not this will repent. 67.

That nature which always thinks of the good done to us is gratitude. Forgetting the good done to one will reduce that one to dire poverty Those who do not realise that one past good formed the fount for the present will be forced to recall it when they come to grief and consequent suffering.

௩. நாண் நிலை.

அல்லவைக்கு நாணுதார் அஃதான் றடிப்படுக்கும்
இல்லவைக்கு நாணுதலென் ஏங்கியே!—நல்லவைக்கே
உள்ளுவப்பார் என்றும் உகுக்கார்நாண்; ஒவ்வாத
கள்ளுவப்பார் காய்மோ களி! 68.

பொழிப்பு : தாம் செய்யும் நன்மையல்லாத செயல்களுக்கு நாணுதவர், அவை அமைந்து அடிநிலைப்படுத்தும் வறுமை நிலைக்கு மனம் வருந்தி நாணுவது என்ன பயன் தரும் ? நல்லனவற்றுக்கு உள்ளம் விரும்புகின்றவர்கள், என்றைக்கும் அல்லனவற்றைச் செய்ய நாணுகின்ற தன்மையைக் கைவிடமாட்டார்கள். தமக்குப் பொருந்தாத கள் குடியால் உள்ளம் மகிழுவார், அதனைக் குடிக்கும் பிறரை வெறுப்பார்களோ, வெறுக்கார் என்க.

3. ON SHAME.

Who feel no shame for what's not good
To feel for poverty's no good.
Heart glad at good will feel no shame:
Will drunkard call his like a name? 68.

If those who do not feel ashamed of what is wrong feel so when they come to the deplorable state of poverty, of what good will it be? Those who rejoice inwardly, thinking ever of the good will never give up their innate nature of feeling ashamed for doing what is not good. Will he who enjoys drinking ever despise another who drinks? Certainly not.

4. முறை செயனிலை.

விசும்புவளி தீநீர் விரிநிலமென் றைந்தும்
பசும்புல்லோ டுழ்க்கும் பயனும்—இசும்பின்றி
எய்துவித்தல் காத்தல் இழுக்கின் தடிந்துமுறை
செய்துவித்தல் ஆள்மைச் சிறப்பு. 69.

பொழிப்பு: விசும்பும் வளியும் தீயும் நீரும் அவற்றால் விரிந்த நிலமும், அவை ஐந்து பூத நிலைகள், பசும்புல் முதலியவற்றால் உகுக்கின்ற பயன்களும், வழுக்கலின்றிப் பெறுவித்தலும், அவ்வாறு பெறுவதைச் சிதைக்கும் நிலைகளினின்று காத்து நிற்றலும், அந்நிலைகளில் தவறுகின்றவரைத் தண்டித்து முறை செய்தலும் அரசாளுமையின் சிறப்பு ஆகும்.

4. ON RENDERING JUSTICE.

Sky, wind, fire, water, land're elements
Five with grass yield our requirements;
Which the rule guards from frittering
Punishing cause to suffering, 69.

The sky, air, fire, water and earth that emanate from one another are the elements five. These with the vegetation yield without fail all that we need. To vouchsafe these for our use and to punish those who fritter away redound to the glory of a good rule.

ரு. பொறை நிலை.

மிகைபொறுத்தல் மாண்பொறையா மேலோர் வகுப்பர்
தகையொருவர்க் கென்றுமே தாழ்தல்—பகையறுக்கும்
உள்ள உரனதுவாம் ஒள்ளியோர்க் கொண்பொறையே
தள்ளத் தகாத தகவு ! 70

பொழிப்பு: உலகியலான் எதுவும் அளவின் மிகுதலைப் பொறுத்துக் கொள்ளுதலையே பெருமை மிக்க பொறை என்று அறிவின் மேம்பட்ட சான்றோர் வகுத்துச் சொல்வர். ஒருவரின் தகுதி நிலை என்பது அறியார்பால் அவர் தாழ்ந்து போதலே. அந்நிலையே பகையை அறுக்கின்ற உள்ள உரன் ஆதும். அறிவுள்ளவர்க்கு ஒளி தரும் பொறையுடைமையே எந்நிலையிலும் தவிர்க்கக் கூடாத தகுதியாகும்.

5. ON PATIENCE.

Bearing excess as patience rate
The wise. To submit's high state
That roots out enmity. As such
The wise would like to have it much. 70.

To bear the excess of the worldly is what the wise consider as patience. What is proper for one is to be humble always. In that state one can root out enmity. So, it is patience that will adorn the wise in any state.

புதிய வரலாற்று நூல்,

உண்மையான அகப்புறச் சான்றுகளுடன்!

பாவாணரின் செ. சொ. பி. அகரமுதலித் திட்ட உதவியாளர்,
பன்மொழிப்புலவர்

இரா. மதிவாணன், க. மு.;

அவர்கள் எழுதிய

இலெமூரியா முதல் அரப்பா வரை

O அனைவரும் கட்டாயம் படிக்கவேண்டிய ஆய்வு நூல்!
O தமிழினத்தின் மெய் வரலாறு !
O பாவாணரின் அணிந்துரையுடன் கூடியது !

விலை உருபா ஒன்பது — பதிவஞ்சல் செலவு 2-50.

கிடைக்குமிடங்கள் :

தென்மொழி சென்னை—5. **சேகர் பதிப்பகம்** சென்னை—83.

உலகியல் நூறு.

— பெருஞ்சித்திரனுர் —

[மொழிபெயர்ப்பு : த. முத்துக்குமரன், க. இ.]

14. அறவியல்.

1. வாய்மை.

பொய்யாமை வாய்மை! புறத்தும் பிறர்க்கூறு
செய்யாமை உள்ளச் சிறப்பென்க;—வையத்து
வாழ்ந்தார் அகத்தெண்ணும் வாழ்வெல்லாம் வாய்மைக்கண்
ஆழ்ந்தார் அவரென்னும் ஆறு! 66.

பொழிப்பு : பொய்யாக இல்லாதது வாய்மை. புறநிலையான் பிறர்க்கு ஊறு செய்யாதிருத்தலே உள்ளத்தின் சிறந்த தன்மையாகும் என்க. இவ் வையத்தின்கண் இன்றுவரை வாழ்ந்து போயினுரை உள்ளத்தில் வைத்துப் போற்றுகின்ற தன்மை எல்லாம் வாய்மை நிலையிலே அவர் நிறைந்து நின்றுர் என்னும் நெறியாலேயே!

14. ON KNOWLEDGE.

1. OF TRUTH.

Truth's no falsehood; causing no hurt
Speaks heart's excellence. In good spirit
Think well of all leading life full,
Because their heart with truth was full. 66.

No falsehood is truth: To cause no external injury is the excellence of the heart. To think well of those who had to this day lived and left the world is certainly to realise that their full life was broad-based on the solid rock of truth in all its phases.

2. நன்றி நிலை.

நன்மை நினைக்குணர்வே நன்றி! நலன்மறத்தல்
இன்மைக் கிலக்காக்கும் எஞ்ஞான்றும்;—முன்மைநலம்
ஒன்றன்றே பின்மைநிலைக் கூற்றுகும் என்றுணரார்
அன்றன்றே உய்வர் அறிந்து! 67.

தி, நா. அறிவொளி க.மு. தலைமையில் பட்டிமன்றமும், பிற்பகல் 4 மணியளவில், புலவர் அரிமதி, தென்னகன் தலைமையில் பாட்டரங்கமும் நடைபெற்றன. மாலை 6-30 மணியளவில் பாவலர் ச, சிவப்பிரகாசம் தலைமையில் திருவாளர்கள் தீ. நா. அறிவொளி, இ. வெற்றிவேந்தன், சொ. அன்பரசன் ஆகியோர் உரையாற்றினர், திரு. ம. இலெ. தங்கப்பா க.மு, அவர்களின் கட்டுரையை, திருவாட்டி தங்கப்பா படித்தார், இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனர் சிறப்புரையாற்றிட விழா இனிது முடிந்தது. விழாவை இ, வெற்றிவேந்தன், இ. செம்பியன் இருவரும் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

4. வ. பாவாடை - ஞானசேகரி, திருமண விழா.

கடந்த 5—6—77 அன்று, பாகூர், கீழ்க் குமாரமங்கலத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனர் தலைமையில், வ, பாவாடை-ஞானசேகரி அவர்களின் தமிழ்த் திருமணம் நடைபெற்றது. திருவாளர்கள் பாபு. கோவிந்தராசன் ச. ம, உ., நா, இராசாங்கம் (தமிழ்நாடு முன்னாள் அமைச்சர்) நா. நந்திவர்மன், க. இ முதலியோர் வாழ்த்துரைக்குப்பின், தலைவரின் வாழ்த்துச் சிறப்புரையுடன் மண விழா இனிது நிறைவுற்றது.

பாவாணர் செந்தமிழ்ப் பயிற்றகம்-கதிராமங்கலம்-குடந்தை கோடைப் பயிற்சி வகுப்பு.

கதிராமங்கலம் பாவாணர் செந்தமிழ்ப் பயிற்றகம், இக் கோடை விடுமுறையில் விடை 2 (15—5—77) முதல், விடை 16 (29-5-77) முடிய 15 நாட்கள் மாணவர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் கோடை பயிற்சி வகுப்பு நடத்தியது. நாள்தோறும் இரவு 7 மணி முதல் 9-30 வரை, பயிற்றுசிரியர் கதிர்-தமிழ்வாணன் (குடந்தை வட்ட உ.த.க. அமைப்பாளர்) அவர்கள் பிறமொழி விளக்கம், பிழைமொழி விளக்கம், வேர்ச்சொல் விளக்கம், வினுவிடை விளக்கம், தனித்தமிழ் அறிஞர்களின் வரலாறு, தனித்தமிழ் இதழ்கள்பற்றிய விளக்கம், அறிவியல், குமுகவியல், மொழியியல், வரலாற்றியல் பற்றிய விரிவுரைகள் ஆகியவற்றை முறையே விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்கூறினர். மாணவர்களுக்கு தமிழறிவூட்டினர் எனப் பயிற்றக அமைப்பாளர் திரு. பர். அ. சோமசுந்தரனர் தெரிவிக்கின்ருர்.

சுடர்வேந்தன்-அறிவுக்கொடி திருமணக்கொடை

சிறந்த தென்மொழித் தொண்டரும், கோவை, செந்தமிழ்க் காப்புக் கழக உறுப்பினரும் ஆகிய மு. சுடர்வேந்தன், (மு. சுப்பிரமணியன்) என்பார்க்கும், அறிவுக்கொடிக்கும், கடந்த விடை 19 (1—5—77) அறிவனன்று, நடைபெற்ற திருமண நினைவாக உரு: 10 நன்கொடை வரப்பெற்ருேம். சுடர்வேந்தன்-அறிவுக்கொடி அவர்களின் இல்லறம் இனிதே நடைபெறுக எனத் தென்மொழி நிறை நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

களாக இருந்தால், நோக்கங்கள் வளரா; மாறாக வீழும். தி. மு. க. வின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அதற்குச் சான்று. அரசு சாராத ஓரமைப்பை உருவாக்க நீங்கள் ஏன் எண்ணிப் பார்க்கக்கூடாது?

—சிவ. ஆதிநாதன், சென்னை-14.

0;530: பேரன்புசான்ற ஐயா அவர்களுக்கு வணக்கம்! தொன்னெடுங் காலத்திற்கு முன்பே வடவாரியனால் தமிழனுக்கும் தமிழ் மண்ணுக்கும் பூட்டப்பட்ட அடிமை விலங்கை அறுத்தெறிய மாநாடு கூட்டியமைக்காகவும் தமிழ்க்குருதி ஓட்டமும் தன் மான உணர்வில் நாட்டமும் இல்லாத என்போன்ற – ஏன் கொள்கைப் பிடிப்பில்லா —............... போன்றோர்களின் மாய மொழிகளில் மயங்கியமைக்காகவும் சிறைசென்ற செந்தமிழ்த் தாயின் முதற் புதல்வ, தங்கட்கு மீண்டும் என் வணக்கம் உரித்தாக்குகின்றேன்.

ஐயா, தங்களின் கருத்து வன்மை தமிழ் நிலத்தை மீட்டற்கு மிகையாயிருப்பது எவ்வாறுண்மையோ, அதுபோன்று தங்களின் பின் நிற்கும் ஒற்றுமையில்லாத் தமிழர் கூட்டம் குறைவாயிருப்பதும் உண்மையேயாம்! பேரியக்கமோ அன்றிப் பேரியக்கமாய அரசியற் கட்சியோ இத்தகைய வினையினை மேற்கொள்ளத் தக்கனவாயிருக்கவும் ஓரிரு அரிமாக்களையே தம் பெரும் படையெனக் கொண்டு அரிதின் முயன்று எளிதில் சிறைப்படல் நன்றென்று கருதினீர்களா? அல்லது தமிழ்த்தாய்க்கு மேலும் தக்க பல அணிகலன் சேர்த்தல் நன்றென்று கருதியே அவ்வாறு செய்தீர்கள் போலும்.

காட்டிக்கொடுக்கும் கயமையாளரும் அவரையே அரனென்று அடைந்த அறிவாளிகளும் அரசியல் தெளிவில்லா புறவுணர்வுப் பிண்டக் கும்பலுமே நம்மிடைப் பல்கிப் பெருகியிருத்தல் தங்கட்குத் தெரியாத ஒன்றா? மக்கள் மனநிலையும் அரசியல் சூழலும் அறிந்து செயற்படுதல் என்பது தங்கட்குப் புதிதும் புரியாததும் அல்ல. எனினும் என் போன்றவரின் அடிமனத்தின் ஆற்றாமையே இம்மடல். ஐயா, நல்லதை உணரா இத் தமிழர் கூட்டம் எக்கேடு கெடினும் கெடுக! எவ்வாறெழியினும் ஒழிக! ஆயின் தங்கள் வாழ்நாளில் தமிழ்த்தாய்க்குப் பெருமை சேர்ப்பதே முதன்மையான தொன்றாக அமையட்டும். இடுக்கண் கண்டேவா என்போன்ற இழிதகையாளர் பலரையும் அடையாளங் கண்டுகொண்ட பின்னரும் 'விடுதலைக்கென வீணே தங்கள் தனித்தமிழ்' ஆற்றல் அழியவேண்டா. பிறர்க்கறி வுறுத்தும் பேரறிவாளர்க்கு அறிவு கொளுத்த இயலுமா? காலம் விடையளிக்கும். ஐயா, தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 10 அலுப்பியுள்ளோம். அன்பு மறவா,

—ந சுப்பையன், மு பரமசிவம், அருமடல், பெரம்பலூர் வட்டம்.

0:531: பெருமதிப்பிற்குரிய பாவலர் ஐயா அவர்கட்கு, தங்கள் அன்பன் கோ. நடராசன் அன்புடன் வரைவது, தாங்கள் பல்லாண்டுகளாகத் தென்மொழி வாயிலாக தமிழ்நாட்டிற்கு ஆற்றிவரும் பெரும் பணி கண்டு மிகவும் மகிழ்ச்சி. தாங்கள் தனித்து நின்றே தமிழனைச் சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டு வருவது மிகவும் போற்றி வரவேற்கப் படவேண்டியதொன்று. ஆனால் தங்கள் முயற்சிக்குத் தமிழ் நாட்டில் எந்தவகை விளம்பரமும் இல்லாத நிலையில் அதற்கேற்ற பலன் கிட்டாது என்பது எனது தாழ்மையான எண்ணம்.

தமிழன் தற்பொழுது என்புருக்கி நோய், புற்று நோய், தொழு நோய், கக்கற் கழிச்சல் போன்ற நான்கு பெரும் நோய்களால் பீடிக்கப்பட்டு முற்றிய நிலையில் மயங்கிக் கிடக்கிறான். அவனை எவராலும் பிழைக்கவைக்க இயலாத அளவிற்கு வீழ்ந்து விட்டான். அவனிடம் இருந்த வீரம், ஓடி மறைந்துவிட்டது. அவன் போற்றிய வாழ்க்கை நன்னெறிகள் அவனை விட்டு விலகிவிட்டன. தன் உணர்வு இழந்த

நிலையில் அவன் வீழ்ந்துவிட்டான். அவனைக் கட்டி எழுப்பவேண்டும். அதற்கு முன்னர், அவனை பிடித்துள்ள நோய்களிலிருந்து அவன் விடுதலையடைய வேண்டும். தமிழனுக்கு என்புருக்கி நோயாக இக்கால் அரசியல் கட்சிகளும், புற்று நோயாகத் திரைப்படங்களும், தொழுநோயாக மதங்களும், கக்கற் கழிச்சலாகப் பெரும் முதலாளியமும் இருக்கின்றன. இந்நான்கும் ஒன்றாகச் சேர்ந்து தமிழனிடம் உள்ள வீரம், சிந்தனையாற்றல், உழைப்பு, உரிமை உணர்வு, தன்மதிப்பு (சுயமரியாதை) போன்ற பண்புகளைத் திட்டமிட்டு அழித்து வருகின்றன. அத்துடன் இந்நான்கு நோய்களுக்கும் சார்பாகப் பெரும் விளம்பரங்களைத் தந்நலம் கருதி இந்நாட்டில் வெளியாகும் செய்தித் தாள்களும், திங்கள், அரைத்திங்கள் இதழ்களும் அளித்து வருகின்றன. நாட்டில் எத்தனையோ தமிழ்மொழி அறிஞர்கள், தந்நலம் கருதா அரசியல் ஈடுபாடு கொள்ளாத பொதுநல நோக்குடையோர், அறிவியல் அறிஞர்கள், பேராசிரியர்கள், மெய்ப்பொருளறிஞர்கள் இருந்தும், எவ்வகைத் தகுதியுமில்லாத மேலே குறிப்பிடப்பட்ட நான்கு தமிழினக் கெடும்புகட்கும் நம்நாட்டுச் செய்தித் தாட்களும் வானொலியும் பெரும் விளம்பரம் அளித்து வருவது தமிழனது வீழ்ச்சிக்குப் பெரிதும் காரணியமாகும். ஆகையால் தங்களைப்போன்றவர்களால் இவர்களை எதிர்த்து ஒரு பெரும் போராட்டம் முதலில் நடத்தப்பட வேண்டும் என்பது எனது அவா. இதற்காகத் தாங்கள் குறைந்தது, “தற்கொலைப் படை” போன்ற 400 குடும்பப் பற்று அனைத்தும் அறுத்த தமிழ் மறவர்களைக் குறிப்பாக இளைஞர்களாக ஒன்று திரட்டித் தமிழ்நாடு முழுதும் கால்நடையாகச் சென்று, தமிழக மக்கட்கு உண்மை நிலையை உணர்த்தவேண்டும். இவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்து ஒரே சமையத்தில் சென்னை, நாகை, கோவை, குமரி போன்ற இடங்களிலிருந்து கால்நடையாக ஒவ்வொரு குழுவும் தனது நடைச்செலவை மேற்கொண்டு, அரசியல், திரைக்கூத்து, மதம், முதலாளியம் ஆகிய இவற்றை எதிர்த்து நன்கு விளக்கமளித்துக் கொண்டு கடைசியாகத் திருச்சி மாநகரில் ஒன்று கூடிப் பெரும் மாநாடு கூட்டித் தக்க செயல்முறைகளை உருவாக்க வேண்டும்.

இதற்காக நான் என்னை நம்பியுள்ள என் மனைவி, குழந்தை ஆகிய இருவருக்கும் நிலையான ஓர் ஏற்பாட்டை இன்னும் இரண்டாண்டுகட்குள் செய்துவிட்டுத் தங்களது தலைமையில் என்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு அணியமாகி வருகிறேன் என்பதைத் தங்கட்கு உறுதி கூறித் தங்கள் அன்பான மடலை எதிர்நோக்கி இத்துடன் என் மடலை முடித்துக் கொள்கிறேன். தங்கள் அன்புள்ள,

கோ. நடவரசன், அறி. இ, வலங்கைமான்,

0:532. ஐயா! வணக்கம் பல. தன்னலம் கருதாது தமிழ்மொழிக்கு விக்கிட்டு வளர்ச்சியுறும்படி தம்மாலியன்றளவும் ‘தென்மொழி’’ திங்களிதழ் மூலம் தமிழன்னையைப் பாதுகாத்து வரும் ஏந்தலே! ‘ஒருவீர் தோற்பினும்தோற்பதுங் குடியே என்றுகோவூர்கிழாரின் புறநானூற்றுப் பாடல் வழியாக எடுத்துச் சொல்லியிருப்பது பயனளிக்கும். திரு. அரசேந்திரன் எழுதியுள்ள சீனத்தில் ஒரு தமிழ்நாடு காணி என்ற கட்டுரை நன்றாக உள்ளது. இற்றைத் தமிழனின் இழிநிலையைப் பாடல் வழியாகப் படம் பிடித்துக் காட்டியிருப்பது (முன்னட்டையில்) நூற்றுக்கு நூறு உண்மையே!

—அழ. அண்ணாமலை, ஆடுதுறை.

தென்மொழி மின் அச்சகம் சென்னை-600005. (தமிழகம்)